பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU- National Tamil Daily

மலர் 27 ஆடி 11 ஜுல்ஹஜ் 7 இதழ் 166

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 26-7-1985

—— தனிநாடு அல்லது நியாயமான அரசியல் தீர்வு ——

## திம்புவில் தீர்க்கமாக வைக்க கூட்டணிக் குழு ஆராய்கிறது

[சென்னை]

தனிநாட்டுக்கோரிக்கை அல்லது நியாயமான அரசியல் தீர்வு ஆகிய இரண்டில் ஒன்றினைத் தீர்க்கமாக பூட்டான் சமரசப் பேச்சுக்களில் முன் வைப்பது குறித்து தமிழர் விடுதலைக்கூட்டணி ஆராய்ந்து வருகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு நேற்று சென்னையில் இது குறித்து விரிவாக ஆராய்ந்தது.

பூட்டான்பேச்சுக்களின் பின்னர் கடந்தவாரம் இருதடவைகள் இந்த அரசியல் குழு கூடியது. தொடர்ந்து மூன்றுவது தடவையாக இக்குழு நேற்றுக் கூடி மேற்படி விடயத்தை ஆராய்ந்தது.

எதிர்வரும் ஆகஸ்ட் 12-ந் திகதி பூட்டானில் இரண்டாவது தடவையாக இலங்கை இனப் பிரச்னை குறித்த சமரசப் பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளன.

அப்போது தீர்க்கமான கோரிக்கையொன்றினை முன் வைப்பதிலேயே தமிழர் விடு

[7-ம் பக்கம் பார்க்க]

# தமிழ்ப் பகுதிகளில் பூரண ஹர்த்தால்!
# முழுச்சேவையும் ஸ்தம்பிதம்!

## விட்டு விட்டுக் குண்டுவெடிப்பு துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள்!

(ஏ. வி. மாணிக்கம்)

83 ஜூலை இனக்கலவர கொலைகள், வெலிக்கடைச் சிறைப் படுகொலைகளை நினைவுகூரும் வகையில் வடக்கு – கிழக்கு தமிழ்ப் பகுதிகளில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. சகல அரச – தனியார் கூட்டுத்தாபனங்கள் உட்பட வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் அனைத்தும் இந்த ஹர்த்தாலை முழுமையாக அனுசரித்தன. வடபகுதியில் ரயில் சேவை உட்பட அனைத்துப் போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறவில்லை. ஆங்காங்கே குண்டு முழக்கங்கள், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களையும் இடையிடையே கேட்கக்கூடியதாக இருந்தது. ஆயினும் அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

83 ஜூலை இனக் கலவரத்தின்போது வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தீவிரவாத இயக்கத் தலைவர்களுக்கும், இளைஞர்களுக்கும், மற்றும் நாடெங்கும் பரவலாகக் கொலைசெய்யப்பட்ட பொதுமக்களுக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக நேற்று இரண்டாவது நாளாகப் பரந்தளவில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இன்றும் ஹர்த்தால் தொடர்ந்து நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் பயங்கரக் குண்டு வெடிச் சத்தங்களும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன.

படுகொலை செய்யப்பட்ட தீவிரவாதிகளுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இவைஇடம் பெற்றதாகத் தீவிரவாதிகள் விடுத்துள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டின் பிரதான வீதிச் சந்திகளில் 'ரெலோ' இயக்கத் தலைவர்களான குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரின் அதி உயரமான வர்ண உருவப்படங்கள் நிறுத்திவைக்கப்பட்டு பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கைகள் விலங்கிடப்பட்ட நிலையில் வரையப்பட்ட இவ்வுருவப்படங்களின் கீழ் அவர்

[7ம் பக்கம் பார்க்க]

## குட்டிமணி, தங்கத்துரை நினைவுக்கு எம்.ஜி.ஆர். அஞ்சலி!

[சென்னை]



வெலிக்கடைச் சிறையில் 83 யூலை படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரின்இரண்டாவது ஆண்டு நினைவுக்கு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அஞ்சலி செலுத்தினார்.

சென்னையிலுள்ள குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரின் குடும்பத்தவரது இல்லங்களுக்குச் சென்று அவர்களது உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்து எம். ஜி. ஆர். அஞ்சலி செய்தார்.

எம். ஜி. ஆருடன் நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ஆகியோரும் இந்த அஞ்சலியில் கலந்துகொண்டனர்.

தமிழக செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர்.வீரப்பனும் குட்டிமணி, தங்கத்துரை உருவப்படங்களுக்கு மாலைகள் அணிவித்து அஞ்சலி செய்தார். (து)

## கவிதாஞ்சலி பிரசுரம்

[யாழ்ப்பாணம்]

'தமிழ் ஈழ விடுதலை இயக்கம்' கவிதை நடையில் பதிப்பிக்கப்பட்ட நீண்ட பிரசுரம் ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

(7-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலும் பூரண ஹர்த்தால்

(வவுனியா)

வவுனியாவில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அதிகமான கடைகள் பூட்டப்பட்டிருந்தன பாடசாலைகள் இயங்கவில்லை. வவுனியா-யாழ்ப்பாணம் பஸ் சேவைகள் நடைபெறவில்லை. இப்பாதை வழியாக மினி பஸ் சேவையும் நடக்கவில்லை.

(7-ம் பக்கம் பார்க்க)

★ சபையில் பூட்டான் பேச்சு————

## யாரை ஏமாற்றுகிறீர்கள்? - சரத்
## இரகசியம் வேண்டாம் -தினேஷ்

(ஸ்ரீ ஜயவர்த்தனபுர)

பூட்டான் பேச்சுக்களில் சிங்களவரையா தமிழர்களையா அல்லது இந்தியாவையா ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? என்று கலவான எம். பி. சரத் முத்தெட்டுவேகமவும், அப்பேச்சுக்கள் சம்பந்தமானவற்றை இரகசியமாக வைக்க வேண்டாமென மஹரகம எம். பீ. தினேஷ் குணவர்த்தனவும் தெரிவித்தனர்.

பாராளுமன்றத்தில் அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீது நேற்று விவாதம் இடம் பெற்றது. அப்போதே மேற்படி இரு உறுப்பினர்களும்

(7-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு ரயில் சேவையில் மாற்றங்கள்!

[கொழும்பு]

வடபகுதிக்கான புகையிரத சேவையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரும்

[7-ம் பக்கம் பார்க்க]

## வடக்கு, கிழக்கு இணைக்க ஐ. தே. க. அனுமதியாது!
—காமினி

(கொழும்பு)

''வடக்குமாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் இணைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் அனுமதிக்காது'' என்று காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா கூறியுள்ளார்:

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பது சம்பந்தமான விவாதத்

(7ம் பக்கம் பார்க்க)

## 'யாழ்தேவி' சாரதி, 'கார்ட்' கடத்தப்பட்டு,விடுதலை!

(யாழ்ப்பாணம்)

'யாழ் தேவி' சாரதியும், கார்ட்டும் நேற்றுக்காலை யாழ். ரயில் நிலையத்தில் இனந்தெரியாத இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டனர் தொடர்ந்து இரு மணி நேரத்தில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இச்சம்பவத்தினால் யாழ்தேவி நேற்று கொழும்பு புறப்படவில்லை.

நேற்றுக்காலை 7-10 மணிக்கு யாழ்தேவி, யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் வந்து நின்றதும், துப்பாக்கிகளுடன் வந்த சுமார் 25 இளைஞர்கள் சாரதி எஸ். செல்வரத்தினம், கார்ட் எ. எப். ருசல் ஆகிய இருவரையும் கார் ஒன்றில் கடத்திச் சென்றனர்.

யாழ்தேவி ரயில் நிலையத்தில் நின்றபோது அதில் சுமார் 85 பிரயாணிகள் வரை இருந்தனர். யாழ்தேவியில்ஏறுவதற்கு சுமார் 100 பிரயாணிகள்வரை பிளாட்பாரத்தில் நின்றனர். சிலர் ஏறி அமர்ந்துகொண்டனர். இனந்தெரியாத இளைஞர்கள் பிரயாணிகளிடம் சென்ற

(7-ம் பக்கம் பார்க்க]

## இந்தியாவுக்கு இலங்கை கடமைப்பட்டுள்ளது!
—வின்சன்ட் பெரேரா

(கொழும்பு)

''இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியினதும், இந்திய அரசின் முயற்சியினாலுமே இலங்கைத் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கைவிட்டுப் பேச்சு வார்த்தைகளில் இறங்கினர். எனவே இலங்கை இந்தியாவுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது'' என்று பாராளுமன்ற அலுவல்கள் வினை

(7-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

2'', 2½'' கற்களும், திராந்தி பலகை வகைகளும் சகாய விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள். தொடர்பு: மலிரி சேவிசஸ், 87[351], மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல; 22762. சகுந்தலா மெற்றல் வேக்ஸ், குரும்பசிட்டி, தெல்லிப்பழை. 4653

நல்ல நிலையில் உள்ள 9 ஸ்ரீ தொடர்பிலக்க மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 218/7, முனீவரன் வீதி, யாழ்ப்பாணம். 4660

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெண்காய விதை விற்பனைக்குண்டு. கிலோ 250/- ரூபா. தொடர்பு: பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 4676

கொண்டா சி. 70 எக்கோ பவர் 86 சிறி நீலம்/ வெள்ளை ரூபா 10,500/-, தட்டச்சு யந்திரம் ஸ்மித் கொறனு மேசை மடல் ஆங்கிலம் ரூபா 2500/- பிற்பகல் 4-00- 6-00 மணிக்கு தொடர்பு கொள்ளவும். ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. 4679

## தேவை

பழைய செம்பு, பித்தளை, அலுமினியம் உயர் விலைக்குப் பெறப்படும். தொடர்பு: பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 4677

15 வயது மாணவன் ஒருவருக்கு ஆங்கிலம், பொது அறிவு, கணக்குப் பாடங்கள் கற்றுக்கொடுக்க ஆசிரியர் ஒருவர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். விளம்பரதாரர், 67, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். அல்லது நேரில் வரவும். 4658

அனுபவமுள்ள D. A. M. அல்லது D. A. M. S. மருத்துவர்கள் டிஸ்பென்சறிக்கு தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். Dr. K. பாலேந்திரன், இந்திர பவனம், கரணவாய் தெற்கு, கரவெட்டி. 4646

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் கச்சேரியில் எனது இல: EU 1478 கொண்ட 'ரவி' சைக்கிள் தவறிவிட்டது. இது பற்றிய விபரங்களை கீழ்வரும் முகவரியில் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன். தொடர்பு: த. சொக்கலிங்கம், வைரவக் கண்டி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். 4686

## WANTED

A SECRETARY for the YWCA Jaffna. Female Christion- Age 23- 40 years. Minimum qualification G C E (O/L) with credit pass in English and ability to type. Apply with 2 References to; President, Jaffna Y W C A, 496, Navalar Road, Jaffna, on or before 15th August 1985, 4533

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## உள்வாரிப் பகுதிநேரக் கல்விப்பட்டப்பின் டிப்புளோமா 1985-1987

1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிவரை அரசினர் நிறுவனங்களிலும் அரசினர் உதவி நன்கொடைக் கல்வி நிறுவனங்களிலும் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களிடமிருந்து மேற்குறித்த கற்கை நெறிக்கென விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். இக்கற்கை நெறி 1985 ஒக்ரோபரில் ஆரம்பமாகும்.

விண்ணப்பகாரர் 1985-8-31 ஆம் திகதியன்று 50 வயதிற் குட்பட்டவராகவும் பல்கலைக் கழகப் பட்டம்பெற்ற பின்னர் மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக மேற்குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களிற் கற்பித்த அனுபவமுடையவராகவும், பல்கலைக்கழகத்திலிருந்து 25 மைல் எல்லைக்குள் அமைந்த பாடசாலையொன்றில் கற்பிப்பவராகவும் இருத்தல்வேண்டும்.

எழுத்துத் தேர்வினைத் தொடர்ந்து நடைபெறும் நேர்முகத் தேர்விலிருந்தே தெரிவு நடைபெறும்.

பல்கலைக்கழக நிதிக்கிளைச் சிறுப்பரிடம் ரூபா 10/- செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டினைக் கல்விக்கிளை உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்து அவரிடம் இருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் தபாலில் அனுப்பட்டமாட்டா.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
24-7-85. 4684

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்.

பத்தமேனி அச்சுவேலி காலஞ்சென்ற சரவணமுத்து சிவகுரு என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்து விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன) இல:
நியாயாதிக்கம்) T/244

சரவணமுத்து சிவகுரு கைம்பெண் சின்னத்தங்கம் பத்தைமேனி, அச்சுவேலி.

மனுதார்.

எதிராக,
1. சரவணமுத்து சிவகுரு மகள் கலாநிதி.
2. சரவணமுத்து சிவகுரு மகள் தயாநிதி.

எதிர்மனுதாரர்கள்.

மேற்படி வழக்கில் மேற் கூறப்பட்ட இறந்தவரின் மரணச் சொத்து நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 18ம் திகதி நாளன்று முற்பகல் 9-30மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றி அப்பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாதுஎன்பதற்கு காரணம் இருப்பின் காட்டுமாறு வேண்டப்படுகின்றீர்.

1985 ஆண்டு ஆடி மாதம் 10 ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,

ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
சொ. தியாகேந்திரன்
விண்ணப்பகாரியின்
சட்டத்தரணி. 4643

---

## வேண்டுகோள்

### அனைத்து விடுதலை இயக்கங்களுக்கும்

கடந்த 2-7-85 அன்று எனது 83 ஸ்ரீ 5106-ம் இலக்க (செசி இல. 5164218. இயந்திர இல. 5164259) நீல நிறமான ஹொண்டா C 90 மோட்டார் சைக்கிள் என்னிடமிருந்து ஏமாற்றி அபகரிக்கப்பட்டுள்ளது. தயவுசெய்து தங்களாலியன்ற பங்களிப்பை நல்கி அதனை மீட்டுத்தரும்படி வேண்டுகின்றேன்.

ச. புவனசுந்தரம்,
பிரசித்த நொத்தாரிசு.
வனாக லேன், திருநெல்வேலி. 4680

---

பூநகரி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
பூநகரி.

## கேள்வி கோரல்

### வெற்றுச்சாக்கு

| | | | |
|---|---|---|---|
| 01. | அரிசி 68 கிலோ | சாக்கு | 317 |
| 02. | 1 அ. (50 கிலோ) | ,, | 295 |
| 03. | சீனி, அரிசி (50 கிலோ) | ,, | 260 |
| 04. | அரிசி கோறு | ,, | 55 |
| 05. | தரம் 1 பிறீமா | ,, | 500 |
| 06. | தரம் 2 பிறீமா | ,, | 225 |
| 07. | நீலக்கோடன் | ,, | 25 |
| 08. | தரம் 1 கழிவு | ,, | 180 |
| 09. | தரம் 2 கழிவு | ,, | 103 |
| 10. | சக்கரை | ,, | 31 |
| | | | 1941 |

மேல்காண் விபரப்படியுள்ள வெற்றுச் சாக்குகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. வெற்றுச் சாக்குகளை பிரதம சங்கத்தில் பார்வையிட்டுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 5-8-85.

இங்ஙனம்,
பொது முகாமையாளர். 4681

---

## வாயார வாழ்த்திரோ!

ஊனப் பிறவிகளால் உயிர்துறந்த உமைநினைந்து
வானங் கறுத்திங்கே வாயார அழுதமழை
மானத் தமிழாயெம் மண்கலந்து நிறம்மாறி
காணச் சகிக்காமல் கடுஞ்சிவப்பாய் ஓடுதடா.

● ● ●

வானம் கறுத்துவிட வான்பார்த்த கடலன்னை
தானுங் கறுத்துவிடத் தண்ணீர் கறுத்ததனால்
மீனுங் கறுத்துவிட மீன்பார்த்த வெண்கொக்கு
தானுங்கறுக்காத தன்மையினுல் தான்வாடும்

● ● ●

கட்டுக்கு விருந்தெம்மின் கவலையிதைக்காட்டிடவே
மொட்டுக்க ளதுகூட முகமலர வில்லையடா!
குட்டுக்களினி வாங்கோம் கொதித்தெழுவோம்
எனச்சொல்லி
வட்டுக்கு விருந்திங்கே வண்டதுவும் பாடுதடா!

● ● ●

இன்னை எங்களது ஆண்சிங்க மத்தனையும்
வீணாக இறந்ததினம் வீரர்களே நீரெல்லாம்
ஊனாலே உடலாலே உயிராலே அவர்தம்மின்
வானக உயர்ந்தபுகழ் வாயார வாழ்த்திரோ.

— இ. ஜெயராஜ்

---

## "சைவசமய வளர்ச்சியில் மங்கையர் பங்கு அவசியம்"

(மாவிட்டபுரம்)

''சைவசமய வளர்ச்சியில் மங்கையர்களின் பணி மிகவும் இன்றியமையாதது. மங்கையற்கரசியார் போன்று நம் மத்தியில் உள்ள மங்கையர்களும் பணிபுரிந்தால் சைவம் மேலோங்கும் நிலை ஏற்படும். ஆகவே நமது மங்கையர்கள் சமய வளர்ச்சியில் அதிக கவனம் எடுக்கவேண்டும்.''

இவ்வாறு ஏழாலை சைவசமய அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சி. சக்திகிரீவன் ஏழாலையில் சைவ மங்கையர் கழகமொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்த கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சைவ மங்கையர் கழக நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்:

போஷகர்கள்: திருமதி சிவானந்தனி யோகேந்திரா, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி; தலைவி: திருமதி எஸ். குகநாகராசா, உப தலைவி: திருமதி எஸ். கமலாம்பிகை, செயலாளர்: செல்வி இ. உதயரஞ்சனி, பொருளாளர்: செல்வி ச. ஜெயகலா.

நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

## சூதாட்டத்தில் சிக்கிய பெண்மணி

(கொழும்புத்துறை)

ரயிலில் சூதாட்ட ஆசையில் சிக்கிய பெண்மணி யொருவர் தனதுபணத்தை இழந்து கதறியழுது பரிதாப அனுபவத்திற்குள்ளானர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த மெயில்ரயிலிலேயே இது இடம் பெற்றது.

ரயில் மாகோச்சந்திக்கருகில் வந்து கொண்டிருக்கும் போது ஒருகோஷ்டிரயில்பிரயாணிகளை சூதாட்டத்திற்கு அழைத்து ஆசைகாட்டவே ஏமாந்த 45 வயதுப் பெண்மணி ஒருவரும் சூதாட்டத்திற்கு உடன்பட்டுத் தோல்வியடையவே சூதாட்ட நபர்கள் அப்பெண்மணியிடமிருந்து 500 ரூபா பணத்தைப் பறித்துக்கொண்டு சென்றுவிட்டனராம்.

பிரஸ்தாப பெண்மணி கெஞ்சி மன்றாடியும் அந்நபர்கள் பணத்தைப் பறித்துச் சென்றுவிட்டார்களாம்.

---

## மூதாட்டி மரணம்

(வவனியா)

காட்டுயானைதாக்கி 60வயது மூதாட்டி ஸ்தலத்திலேயே பலியானர். இச்சம்பவம் கடந்த திங்கள் இரவுவவனியா மன்னார்வீதி சாளம்பைக்குளம் என்ற இடத்தில் இடம் பெற்றுள்ளது.

முகைதீன் கனி கச்சுஉம்மா என்ற முஸ்லீம் மூதாட்டியே யானை தாக்கி மரணமானவராவார்.

கடந்த திங்கள்இரவு ஏதோ சத்தம் கேட்டதினை அடுத்து இந்த மூதாட்டி நள்ளிரவு கதவைத்திறந்து முற்றத்தில்வந்து பார்த்தபோது அங்கு நின்ற காட்டுயானை மூதாட்டியினை தூக்கிஎறிந்துவிட்டது. இதனால் இவர் மரணமாகியுள்ளார் என தெரியவந்தது.

---

## அபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு - கண்டுப்புளியடி சிவ உக்கிர வீரபத்திரர் கோவில் வருடாந்த அபிஷேகம் அடுத்தமாதம் 10 ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

இந்த அபிஷேகத்தில் 10 ம் திகதி முதல் 18 ம் திகதி வரை விசேட அபிஷேக பூசை வழிபாடுகளும் 19ம் திகதி சங்காபிஷேகம் விஷேக கிரியைகளும் நிகழ்ந்து வைபவம் பூர்த்தியாகும். அபிஷேக கிரியைகளை பிரம்மஸ்ரீ இ. குமாரசாமிக்குருக்கள் நிறைவேற்றிவைப்பார் இவ்வுற்சவத்தை முன்னிட்டு சமய அறிவுப் போட்டியும் நடைபெறும்.

---

## விற்பனைக்கு

றேடியோ, தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ, டெக் இவற்றின் உதிரிப்பாகங்கள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

## சித்ரா ரெக்ரைஸ்ஸ்

(ரெலிகோணர் கிளை)
159, மின்சாரநிலைய வீதி, நவீனசந்தை,
யாழ்ப்பாணம், 4633

# தீர்வு உடன்படிக்கையை விளக்க லோங்கோவால் அவசரக் கூட்டம்!

(புதுடில்லி)

**பஞ்சாப் பிரச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்திக்கும் தமக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் விபரங்களை விளக்குவதற்காக அகாலிதள் கட்சியின் தலைவர்களின் அவசர கூட்டமொன்றை அகாலிதள் தலைவர் திரு.சன்ஹர்சன்சிங்லோங்கோவால் அனந்சாகிப்பூரில் இன்று கூட்டுகிறார்.**

பஞ்சாப், புதுடில்லி, ராஜஸ்தான், ஹரியானு, உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த அகாலிதள் மாவட்ட உறுப்பினர்கள் இதில் கலந்துகொள்வார்கள்.

பஞ்சாப் பிரச்னை தொடர்பாக செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் சகல விபரங்களையும் அவர் கூட்டத்தில் விளக்குவார்.

### சண்டிகார் பஞ்சாப்பிற்கு

சண்டிகாரின் தலைநகர் பகுதியை பஞ்சாப்பிற்கு வழங்குவதற்கு இந்த உடன்படிக்கை முக்கியமாக வழிவகுக்கிறது. சண்டிகாரில் அடங்கியுள்ள பஞ்சாப் மொழிபேசும் பகுதிகளும் பஞ்சாப் மாநிலத்துக்கு அளிக்கப்படும். சண்டிகாரில் இருக்கும் ஹிந்தி மொழிபேசும் பகுதிகள் ஹிரியானுவுக்கு வழங்கப்படும்.

சண்டிகாரை பஞ்சாப்பிற்கு அளிப்பதன் காரணமாக ஹரியானுவுக்கு அளிக்கப்படவிருக்கும் ஹிந்திபேசும் பகுதிகளை கமிஷன் ஒன்று நிச்சயிக்கும்.

### ஹரியானு ஹிந்தி மொழிப்பகுதி

ஹரியானுவுக்கு அளிக்கப்படும் ஹிந்தி பேசும் பகுதிகள் பற்றிய கமிஷன் அறிக்கை இவ்வருட இறுதியில் வெளியாகும் இந்த முடிவுகளை இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### சுக்கிளாய் ஏரி

சுக்கிளாய் ஏரிப்பகுதி சண்டிகாரின் பகுதியாக கருதப்பட்டு பஞ்சாப்பிற்கு வழங்கப்படும். பஞ்சாப் பிரசனையில் இந்த ஏரி நீர் பகுதி பிரச்னையும் ஒன்ருக இருந்தது. இதனை தம்மிடம திருப்பித்தருமாறு அகாலிதள் கோரியிருந்ததும் குறிப்பிடத்தக்கது

1982ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தேதிக்கு பின்னர் நடந்த எந்த ஒரு நடவடிக்கையிலோ அல்லது கிளர்ச்சியிலோ மாண்டுபோய் விட்ட அப்பாவி மக்களுக்கு உதவி தொகையுடன் கூடவே, சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கான நஷ்டஈடு அளித்திடவும், பஞ்சாப் உடன்படிக்கை வகைசெய்கிறது. இதில் கையொப்பமிட்டவுடனேயே பிரதமமந்திரி ராஜீவ். சில எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து இத் தீர்வுபற்றி விபரம் தெரிவித்தார்.

### தலைவர்கள் வரவேற்பு

'பஞ்சாப் தீர்வை' பல அரசியல் தலைவர்கள், முதலமைச்சர்கள், கவர்னர்கள், எம்.பிக்கள், பிரமுகர்கள் வரவேற்றுள்ளார்கள்.

பஞ்சாப் பிரச்னையை தீர்ப்பதில் பிரதமர் ராஜீவ்காந்தி காட்டிய அரசியல் திறமையையும் உடனடி செயலையும் ஹரியானுமுதலமைச்சர்பஜன்லால் பாராட்டியுள்ளார்.

பிரதமரும், பஞ்சாப் தலைவர் லொங்கோவாலும் காட்டிய அரசியல் திறமையும், பொறுமையும் பஞ்சாப் வேதனையையும் நாட்டின் கவலையையும் தீர்த்துவைக்குமென்று பஞ்சாப் கவர்னர் அர்ஜன்சிங் நம்பிக்கை தெரிவித்தார்,

இந்த உடன்பாட்டினுல், பஞ்சாப்பில் விரைவாக தேவைப்படும் அமைதி ஏற்பட்டுவிடும் என்று ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் ஜி. எம். ஷா. நம்பிக்கை வெளியிட்டார்,

பிரதமமந்திரியின் துணிச்சலான, திறமையான தலைமையாற்றலை இது மீண்டும் நிரூபித்துவிட்டதென்று அசாம் முதலமைச்சர் கூறினர், பஞ்சாப் பிரச்னையை தீர்த்து வைத்ததற்காக மேற்கு வங்காள இந்திரா காங்கிரஸ் கமிட்டி பிரதமரை பாராட்டியுள்ளது,

## 7 கோடி ரூபாவில் அண்ணு பூங்கா

(சென்னை)

சென்னையைஅடுத்த வண்டலூரில் 7 கோடி ரூபா செலவில் உருவாகிவரும் அறிஞர் அண்ணு உயிரியல்பூங்காவை தமிழ்நாடு முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரன்நேற்று திறந்துவைத்தார்.

1265 ஏக்கர்களில் இப்பூங்கா உருவாகிவருகிறது. இத்திட்டத்திற்கு இதுவரை 4 கோடி ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த 2 வருடத்தில் மேலும்3 கோடி ரூபா செலவு செய்யப்படும். (ஐ)

## இந்திய எதிர்க்கட்சி தலைவர்கள் வரவேற்பு

(புதுடில்லி)

பஞ்சாப் பிரச்னையைத் தீர்த்தது தொடர்பாகபாரதிய ஜனதாக் கட்சிப் பொதுச் செயலாளர் எம்.கே.சட்வாணிமகிழ்ச்சி தெரிவித்துள்ளார். காங்கிரஸ் (எஸ்) பொதுச் செயலாளர் திரு. உன்னி கிருஷ்ணன் இத் தீர்வு குறித்து பிரதமரையும், அகாலிதள் தலைவரையும் பாராட்டியுள்ளார். ஜனதா வாதியகட்சித்தலைவர் சந்திரசேகர் இதனை ... 

## எம். ஜி. ஆர்., கருணுநிதி பாராட்டுச் செய்தி

(சென்னை)

பஞ்சாப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தமைக்காகப் பிரதமர் ராஜீவ் காந்தியை தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் பாராட்டியுள்ளார்

நீண்ட காலமாக இருந்து வந்த பஞ்சாப் பிரச்னைக்குத் தீர்வுகண்டதன்மூலம் நாட்டு மக்களுக்குக் கொடுத்த உறுதி மொழியைக் காப்பாற்றிவிட்டதாகப் பிரதமருக்கு அனுப்பியுள்ள செய்தியில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்

பிரதம மந்திரியைப் பாராட்டி தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு எம் பழனியாண்டி அனுப்பியுள்ள செய்தியில்; பஞ்சாப் பிரச்னையை சுமுகமான பேச்சுவார்த்தை மூலம், இராஜதந்திர ரீதியில் நேர்மையான முறையில் தீர்த்து நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியிருப்பதைப் பார்த்து நாட்டு மக்கள் மகிழ்ச்சியடைவதாகக் கூறியுள்ளார்.

பஞ்சாப் பிரச்னை சம்பந்தமாக இந்திய அரசுக்கும், அகாலிதள் தலைவருக்குமிடையே உடன்படிக்கை ஏற்பட்டுள்ளதைத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு கருணுநிதி வரவேற்று, இது விஷயத்தில் முயற்சி மேற்கொண்ட திரு ராஜீவ் காந்தியைப் பாராட்டியுள்ளார்.

### யாருடையது

திரு. எஸ். கே. அம்பலவாணர் என்பவர் நான்கு திறப்புக்கள் கொண்ட ஒரு கோர்வையைக் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார் உயரிவர்கள் அலுவலகநேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## அமெரிக்க டாக்டர்களின் மோசடி கண்டுபிடிப்பு

[வாஷிங்டன்]

சில அமெரிக்க டாக்டர்களின் மோசடி ஒன்று அமெரிக்க டாக்டர்களின் காங்கிரஸ் உபகுழு மேற்கொண்ட விசாரணை ஒன்றிலிருந்து தெரியவந்திருக்கிறது.

மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் சில ஸ்தாபனங்களின் விற்பனையை ஊக்குவிக்கும் விதமாக இவர்கள் அநாவசியமான சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டதாகத் தெரியவந்திருக்கிறது. அத்துடன் இந்த சத்திரசிகிச்சைகளுக்காக அவர்கள் மேலதிகமான கட்டணங்களையும் அறவிட்டுள்ளார்கள்

இந்த சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ள இவர்கள் லஞ்சமும் பெற்றிருக்கிருர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இந்த டாக்டர்களுக்கு சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு இலவச பயணங்களை ஏற்பாடு செய்து கொடுப்பதுடன், சரீபியன் வங்கிகளில் கணக்குகளையும் ஆரம்பித்துக் கொடுத்திருக்கின்றன.

## பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் பிரஜைகள் குழு ஏற்பாடு

(மாவிட்ட புரம்)

அசம்பாவிதங்களினுல் பாதிக்கப்பட்ட மக்களின் சொத்து பொருள் இழப்புக்களையும், உயிர் இழப்புக்களையும் குறித்து சரியான கணக்கெடுப்பு ஒன்றை எடுப்பதில் கிரிமலை பிரஜைகள் குழு ஈடுபட்டுள்ளது

83ஜுலை கலவரங்களின்போதும், அதன் பின்பும் யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுவந்த அசம்பாவிதங்களின் போது கீரிமலை, வலித்தூண்டல், சேந்தாங்குளம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஏற்பட்ட அனர்த்தங்கள் பற்றி இக் கணக்கெடுப்பின்போது விபரங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

அசம்பாவிதங்களினுல் பாதிக்கப் பட்டவர்கள் தமக்கு நேர்ந்த இழப்புகள் குறித்து பிரஜைகள் குழுவுக்கு தகவல்களைத் தந்துதவுமாறு பிரஜைகள் குழுத்தலைவர் திரு. க. சுந்தரமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதிக்கப் பட்டவர்களுக்கு நஷ்டஈடு பெற்றுக்கொடுப்பதற்காக நடத்தப்படும் இக் கணக்கெடுப்புக்கு முழுமையான விபரங்களைத் தந்து ஒத்துழைக்குமாறு பாதிக்கப் பட்டவர்களுக்கு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## தென்னுபிரிக்க சம்பவங்கள் ஐ. நா. பாதுகாப்பு சபை இன்று அவசரக்கூட்டம்

### பிரான்ஸ் தூதுவரை திருப்பிஅழைத்தது!!

(லண்டன்)

நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட தென்னுபிரிக்காவில் காணப்படும் சமீபத்திய சம்பவங்கள் குறித்து விவாதிப்பதற்கு ஐ. நா. பந்தோபஸ்து சபையின அவசர கூட்டமொன்று இன்று நடைபெறவிருக்கிறது.

இந்தக் கூட்டத்திற்கான கோரிக்கையை பிரான்ஸ் விடுத்திருக்கிறது தென்னுபிரிக்காவை அதன் செயலுக்காக கண்டனம் செய்யும் தீர்மானம் ஒன்றை பிரான்ஸ் கூட்டத்தில் தாக்கல் செய்யும்.

தென்னுபிரிக்கா பற்றி விவாதிக்க மேற்கத்திய நாடொன்று ஐ நா. பந்தோபஸ்து சபையின் கூட்டத்தை நடத்தகோரியிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

தென்னுபிரிக்காவில் எல்லாப் புதிய முதலீடுகளையும் தான் நிறுத்திவைக்கப் போவதாக பிரான்ஸ் அறிவித்திருக்கிறது தமது தூதரை திருப்பி அழைத்திருப்பதாகவும் பிராஞ்சு அறிவித்திருக்கிறது.

தென்னுபிரிக்காவில் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டதை ஆட்சேபித்து இந்த நடவடிக்கை என்று பிரஞ்சு பிரதம மந்திரி பாரிஸில் செய்தியாளரிடம் தெரிவித்தார். (ஐ)

### ஐ. நா. கல்வி நிறுவனத்தால் தெரிவு

(கொழும்புத்துறை)

பொதுக் கல்வித் ரத்தை மேம்படுத்துவதற்கான வாழ்க்கைத்திறன் கல்விச் செயற்திட்டத்தின் கீழ் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயமும், மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயமும் ஐ நா கல்வி கலாசார நிறுவனத்தினுல் தெரிவுசெய்யப் பட்டுள்ளன.

## பிரிட்டன் 'விசா' நடைமுறை புதிய ஏற்பாடு

(கொழும்பு)

பிரிட்டனில் நுழையவிரும்பி விண்ணப்பிப்போருக்கு தற்போது இலகுவான நடைமுறை ஒன்றினை பிரித்தானிய தூதராலயம் அறிமுகப் படுத்தியுள்ளது. [விண்ணப்பதாரர்க்கு கீழ்க்கண்டவாறு ஆலோசனை வழங்கப்படுகிறது.

திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் முற்பகல் 8 மணிக்கு பிரித்தானிய தூதராலயத்தின் விசா பிரிவு 'விசா'விண்ணப்பங்களைக் கையளிக்கிறது இந்த நாட்களில் தூதராலய வாயிலில் முற்பகல் 8 மணிக்கு விண்ணப்பதாரர்கள் 'கியூ' வரிசையில் நிற்கும் பட்சத்தில் அவர்கள் டணியகக் கட்டடத்தினுள் அனுமதிக்கப்படுவார்கள விசா பிரிவு அலுவலர் ஒருவர் அவர்களுடன் பேசுவார். அதே தினத்தில் நேர்முக சந்திப்புக்கு ஒன்றுக்கு வசதி இல்லாது போனுலும் பிறிதொரு தினத்தில் இந்த நேர்முக சந்திப்புக்கு அன்றே ஏற்பாடு செய்து கொள்ளலாம். உத்தியோக பூர்வ, வர்த்தக விஜயங்கள் சம்பந்தமான

(5-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும் பொருள் யாதொன்றும் இல்.

— திருவள்ளுவர்.

# நமது நோக்கு

## இந்திய மக்களின் இன்னொரு வெற்றி!

பிரதம மந்திரி பதவிக்கு வருவதற்கான தகுதிகள் என்னவென்று ஒரு பள்ளிச்சிறுவன் இந்தியப் பிரதமமந்திரி திரு. ராஜீவ் காந்தியிடம் கேட்டார்

''நாட்டு மக்களை நேசிக்க வேண்டும். தன்னலத்தைத் துறந்து சேவைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் தகுதிவேண்டும்'' பளிச்செசன புன்னகையுடன் திரு. காந்தி பதிலளித்தார்.

மக்கள்சேவையில் தன்னலமற்றமுறையில் தன்னை அர்ப்பணித்துக்கொள்கின்றவனுக்கு பதவியும் பவிசும் தேடிவந்தாலும் அவைகளை மேற்கொண்டு மக்கள் பணிக்கே பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை திரு. காந்தி சொல்லாமல் சொல்லி சிறுவனுக்கு அறிவுறுத்தினார். பதவி கிட்டியதும் சுயநலம் மேவிட்டுமதிப்பு, மரியாதைகளை இழந்து பள்ளத்தில் வீழ்ந்துவிடும் அரசியல்வாதிகளுக்கு ராஜீவ்காந்தியின் கருத்து கண்ணைத் திறக்க வேண்டும்.

முதிய பாரதத்தின் இளம் தலைவரைப்பற்றி இங்கு நாம் இன்று சிந்திப்பதற்கு வேறொரு முக்கிய காரணமுண்டு.

நேர்மையும், சாணக்கியமும், அரசியல் விவேகமும் உள்ள ஒரு தலைவனால் எவ்வளவு சிக்கலான விவகாரத்தையும் திருப்தியாக தீர்த்து வைக்கமுடியும் என்பதை அவர் பஞ்சாப் விவகாரத்தில் எடுததுக்காட்டியிருக்கிறார்.

அனுபவமும் அரசியல் ஞானமும் மிக்க முதிய தலைவர்கள் பலராலும் தீர்த்துக்கொள்ள முடியாமல் போனது பஞ்சாப் பிரச்னை. அத் தலைவர்களின் முயற்சிகளால் அங்கு நிலைமைகள் மேலும் சிக்கலாகி, தீவிரவாதம் உரம்பெற்று தனி சீக்கிய ராஜ்ய கோரிக்கை மும்முரமடைந்தது மட்டுமல்ல, இனப் பிரச்னைகளும் சமயப் பூசல்களும் வலுவடைந்து சமயத்தலங்கள் ஆயுதம் ஏந்திய போராளிகளின் பாசறையாக மாறி இறுதியில் யுத்த களங்களாகவும் அவை விரிவடைந்தன. உணர்ச்சிகள் பிரவாகமெடுத்து உலகத் தலைவர்களில் ஒருவரான அன்னை இந்திரா காந்தியையே சீக்கியப் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றார்கள். அதன் பிறகு எழுந்த இனக்கலவரங்களைப்பற்றிச் சொல்ல வேண்டாம்.

அங்ஙனம் உருவான ஓர் இக்கட்டான நிலைமையில் பாரதத்தின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்ட திரு. ராஜீவ் காந்தி, அன்னையைக் கொன்ற அறிவிலிகள் எனச் சீக்கியர் மீது ஆத்திரம் கொள்ளாமல், அவர்களின் நியாயமான குறைபாடுகளை அறிந்து, விளங்கிக் கொண்டு, அனுதாபம் காட்டி, பேச்சுவார்த்தை நடத்தி, உடன்பாடு கண்டு தீர்த்தும் வைத்துள்ளார்.

இந்திய நாகரிகத்தின், இராஜதந்திரத்தின், சகிப்புத்தன்மையின் இன்னொரு படிக்கல்லாக இவ்வொப்பந்தம் அமைகின்றது.

அகாலிதள் தலைவர் ஸன் ஹர்சன்சிங் லோங்கோவால் புதுடில்லிக்கு வந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டபோது இவ்வளவு சீக்கிரத்தில் ஓர் ஒப்பந்தம் ஏற்படுமென எவரும் நினைக்கவில்லை. பிரச்னைக்கு எப்படியும் தீர்வுகாணப்படவேண்டும், கிடைத்துள்ள சந்தர்ப்பம்வீண் போகலாகாது என்றமனப்பான்மை இருதரப்பிலும்நிலவியுள்ளது. எனவே இரு சுற்றுப் பேச்சுக்களையடுத்து பிரதமர் ஒப்பந்தத்தின் விபரங்களைப் பாராளுமன்றத்தில் அறிவிக்கக்கூடியதாயிருந்தது.

ஹரியானா மாநிலத்தின் பஞ்சாப் மொழி பேசப்படும் பகுதிகள் பஞ்சாப் மாநிலத்துடனும், இந்தி மொழி பேசப்படும் பகுதி ஹரியானா மாநிலத்துடனும் சேர்த்துக் கொள்வதற்கு இவ்வொப்பந்தத்தில் வழிகாணப்பட்டுள்ளமை பிரச்னைத் தீர்வுக்கான முக்கிய அம்சமாகும்.

ஒப்பந்தவிபரம் வெளியானவுடன் பாராளுமன்றத்தின் சகல பிரிவினரும் ஆரவாரத்துடன் வரவேற்றிருக்கிறார்கள். இந்தியாவின் பல்வேறு கட்சிகளும், தலைவர்களும் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்கள். பஞ்சாப்பின் பலபிரிவினரும் ஒப்பந்தத்தை வரவேற்றுள்ளனர்.

பஞ்சாப் மக்களும், ஹரியானா மக்களும் இவ்வொப்பந்தத்தை விருப்பமுடன் வரவேற்பார்கள் என்று நம்பலாம். சீக்கிய பிரிவினை வாதத்தை இவ்வொப்பந்தம் முறியடித்துவிடும் என்றே இந்தியத் தலைவர்கள் கருதுகிறார்கள். ஒப்பந்த ஷரத்துக்கள் முழுமையாகச் செயல்படும்போது பிரிவினைக் கோரிக்கைக்கான அம்சங்கள் மறையுமானால் ஒப்பந்தம் முழுமையான வெற்றியைக் காண்பது திண்ணம்.

அது, இந்திய அரசுக்கோ பிரதமர் ராஜீவ்காந்திக்கோ, சன் ஹர்சின்சிங்லோங்கோவாலுக்கோ அல்லது தனிப்பட்ட அவர்களின் கட்சிகளுக்கோ ஏற்பட்ட வெற்றி என்று கூறுவது பொருந்தாது.

இந்திய மக்களுக்கு, இந்தியாவின் ஒருமைப்பாட்டில் அவர்களும், அவர்களின் தலைவர்களும் கொண்டுள்ள உறுதிப்பாட்டுக்கு ஏற்பட்ட வெற்றி என்பதே பொருத்தம்.

## பயன்தரும் மரம்நாட்டும்பணி

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை சுற்றாடல் சுத்திகரிக்கப்பட்டு பயன்தரும் மரங்களை நாட்டும்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் நேற்று வெறிச்சோடி இருந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். கச்சேரிக்குக் குறைவான ஊழியர்களே வந்திருந்தனர். அவர்களும் உடனடியாகத் திரும்பிச் சென்றுவிட்டனர்.

யாழ். மாநகரசபையில் வேலைகள் நடைபெறவில்லை. ஊழியர்கள் ஒருசிலரே வந்திருந்தனர்.

யாழ். பஸ் நிலையம் வெறிச்சோடிக் காணப்பட்டது. வ. பி. போ. ச. பஸ்கள், மினி பஸ்கள், டாக்ஸிகள், ஓட்டோக்கள் எதுவும் காணப்படவில்லை. தேநீர்க் கடைகள்கூட நேற்றுத் திறக்கப்படவில்லை.

### குட்டிமணி தங்கத்துரை சுவரொட்டிகள்

ஸ்ரான்லி வீதி, மணிக்கூண்டு வீதிச் சந்தியில் குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரின் பெரிய அளவிலான உருவப் படங்கள் தனித்தனியே வைக்கப்பட்டிருந்தன. அவ்வீதி முற்றிலும் வாழை, தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

பல்வேறு இயக்கங்களின் பல வர்ணச் சுவரொட்டிகள் யாழ். நகரெங்கும் காணப்பட்டன. 83 ஜூலை சம்பவங்களை நினைவுகூரும் விதத்தில் இச்சுவரொட்டிகளில் வாசகங்கள் காணப்பட்டன.

நேற்றும் நகர்க் கல்லூரிகள் நடைபெறவில்லை. ஆசிரியர்கள் மட்டும் வந்திருந்தனர்.

யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கிளையில் நேற்றுக் காலை ஊழியர்கள் வந்திருந்தனர். தூர இடங்களிலிருந்து சைக்கிள்களிலும் சில ஊழியர்கள் வந்திருந்தனர்.

முன் கதவைப் பூட்டி, விளக்குகளை அணைத்துவிட்டு ஊழியர்கள் வேலையை ஆரம்பித்த சமயம் இனந்தெரியாத சில இளைஞர்கள் சென்று, ''இன்றும் நாளையும் வேலைசெய்ய வேண்டாம்' என்று கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து ஊழியர்கள் வீடுகளுக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது.

யாழ். நீதிமன்றங்களுக்கு சட்டத்தரணிகளும், கட்சிக்காரர்களும் வராததினால் விசாரணைகள் நடைபெறவில்லை.

யாழ். கல்விக் கந்தோருக்கு வந்திருந்த சில ஊழியர்கள் உடனடியாகத் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் மிகக் குறைவான நோயாளர்களே வந்திருந்தனர். கிளினிக்குகளுக்கும் குறைவான நோயாளர்களே வந்திருந்தனர்.

தியேட்டர்கள், மினி சினிமாக்களில் காட்சிகள் நடைபெறவில்லை. யாழ் நகரின் மருந்து விற்பனை நிலையங்கள், 'பார்மஸி'களும் நேற்று மூடப்பட்டிருந்தன.

நண்பகலுக்குப் பின்னர் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன; மக்கள் எவரும் காணப்படவில்லை.

இம்மாதம் 24ம், 25ம் தேதி ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழீழ அதிரடிப் படையினர் வேண்டுகோள் விடுத்திருந்தனர். 25ம், 26ம் திகதிகளில் ஹர்த்தால் நடத்துமாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் வேண்டுகோள் விடுத்திருந்தது. இத்தினங்களை நினைவுகூருமாறு மற்றும் இயக்கங்கள் வேண்டுகோள் விடுத்திருந்தன. (ச)

# "மக்களுடன் ஒன்றுபட்ட அரச ஊழியனே மதிக்கப்படுவான்'

## சேவைநலம் பாராட்டு விழாவில் உதவி அரசஅதிபர் உரை

(மாவிட்டபுரம்)

''ஒரு அரசரங்க ஊழியர் மக்களுடன் ஒன்றுபட்டு மக்களின் இதயங்களில் இடம்பெறத்தக்கவகையில் சேவையாற்றினால்தான் அவர் மக்களால் மதிக்கப்படுவார். இதேவகையில் சேவையாற்றி இளைப்பாறும் கிராமசேவை அலுவலர் திரு. சு. கனகசபை இன்று அளிக்கப்படும் சேவைநலம் பாராட்டுடன் நிற்காது மக்கள் மனத்தில் என்றும் நிலைபெற்றிருப்பார்''

இவ்வாறு வலி; வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். இராசரத்தினம் கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயத்தில் நடந்த சேவை நலம் பாராட்டு விழாவில் கலந்துரையாற்றுகையில் கூறினார்.

கடந்த 33 வருடங்களாகப் பல கிராமங்களின் தலைமைக்காரராகவும் கிராம சேவையாளராகவும், கிராம சேவை அலுவலராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. சு. கனகசபைக்குச் சேவைநலம் பாராட்டுவிழா கீரிமலை நகுலேஸ்வரம் தேவஸ்தான ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

கீரிமலை நகுலேஸ்வரம்தேவஸ்தானத்தில் விசேடபூசை நடைபெற்று அங்கிருந்து திரு. கனகசபை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டபோது வீதியெங்கும் பூரண கும்பம்வைத்து மாலை அணிவித்து மக்கள் வரவேற்பு அளித்தனர். வீதியெங்கும் வாழைமரங்கள், மகர தோரணங்கள் கட்டி விழாக் கோலம் பூண்டிருந்தது. இவ்விழாவை ஐந்து கி. சே. அலுவலர் பிரிவுகள் ஒன்றிணைந்து நடத்தின.

விழா ஆரம்பத்தில் மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் திரு. கனகசபையின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து ஆசியுரை வழங்கினார். இளவாலை மெய்கண்டான்மகா வித்தியாலய ஆசிரியர் திரு சீ. கனகசபை பாராட்டுப்பத்திரம் வாசித்தளித்தார்.

மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஆசியுரை வழங்குகையில் கூறியதாவது:

''சைவப்பற்று மிகுந்த இவர் சைவ ஆலயங்களுக்கு அருகில் பாடசாலையை நிறுவினார். நகுலேஸ்வர வித்தியாலயம் நிறுவத் தனது சொந்தக் காணியை வழங்கினார். பழமையானவற்றை தள்ளி புதியவற்றைப் புகுத்தி நாட்டை சீரழிக்கும் இன்றைய காலகட்டத்தில் இவர் போன்றவர்கள் மனத்தூய்மையுடன் ஆற்றிய சேவைகளைப் போற்றவேண்டியது எமது கடமையாகும்'' என்றார்.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத் தலைவரும், வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவருமான திரு. சி. சிவமகாராசா பேசுகையில், ''திரு கனகசபை கிராம சேவையாளராக மட்டுமல்லாமல் கூட்டுறவுச் சேவையாளராகவும் மிளிர்கின்றார். சமூகப் பொருளாதார வளர்ச்சிக்காக அவர் அயராது சேவையாற்றினார். இவர் ஆற்றிய சேவை என்றும் நிலைபெற்றிருக்கும் என்றார்.

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம. வித்தியாலய அதிபர் திரு. மு. சிவராசரத்தினம் பேசுகையில், ''இவரை நாம் அரச ஊழியர் என்றவகையில் அல்லாமல் மக்கள் தொண்டனாகக் காணுகின்றோம். மக்கள் மனத்தில் தனக்கென ஒரு இடத்தை பெற்ற இவர் தமது பொதுப் பணிகளைத் தொடரவேண்டும்'' என்றார்.

பன்னாலை சேர். கனகசபை வித்தியாலய ஆசிரியர் திரு. க. உமாமகேஸ்வரம்பிள்ளை, உரையாற்றுகையில் இவர் சேர். பொன். இராமநாதனின் கொள்கை அடிப்படையில் சைவக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார்'' என்றார்,

மற்றும் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதர், திருவாளர்கள் செ. வரதராஜப் பெருமாள், ச. கந்தசாமி, செ. நவரத்தினம் திருமதி இ. தனபாக்கியம், புலவர் ம. பார்வதிநாதசிவம் உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினர்.

வைத்தியசாலையில் பெண் பரிசாரகராக இருந்த திருமதி எஸ் நடராசா வைத்தியசாலை கண்காணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். அவர் எடுத்துள்ள நடவடிக்கையின் பயனாக வைத்தியசாலை சுற்றாடல் சுத்திகரிக்கப்பட்டு அங்கு வாழைபோன்ற பயன்தரும் மரங்களை நாட்டும்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வெள்ளிச் சிந்தனை

## தெய்வவழிபாடும் கூட்டுப் பிரார்த்தனையும்

முனிவர்கள் கடுந்தவம் இயற்றி முக்காலமும் உணர்ந்தவர்களாய்த் திகழ்ந்தார்கள். மன்னர்கள் முன்னின்று நடத்திய மகாயாகங்களின் விளைவாக மக்களும் சுபிட்சமாக வாழ்ந்தார்கள். இன்றோ நாம் கலியுகத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம். வாழ்க்கையில் தொல்லைகள் ஏராளம். மகாயாகங்கள் கடுந்தவங்கள் நம்போன்றவர்களுக்குச் சாத்தியமானவையல்ல. இந்நிலையில்; பக்தி விசுவாசத்தோடும் ஆத்மசுத்தியோடும் செய்யும் பிரார்த்தனைகளே எமக்குப் போதுமானவை.

பிரார்த்தனைக்கு மூன்று அம்சங்கள் அல்லது கூறுகள் உள. அவை பூசனை, செபம், தியானம் என்பனவாகும். இவை மனம், வாக்கு, காயம் என்பனவற்றால் இயற்றப்படுவன.

(5-ம் பக்கம் பார்க்க)

# இன்றைய பலன்

மாதம்—ஆடி
திகதி—11(1085207-26)
வாரம்— வெள்ளி
திதி—நவமி பி.ப. வரை
நக்ஷத்திரம்—விசாகம் பி.இ வரை

மேடம்:- குடும்பத்தில் குதூகலம் குன்றும் உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் மாட்டிக்கொள்வீர்கள். நிதானம் நன்று.

இடபம்:- திட்டமிட்ட காரியம் தடைப்படலாம். தொழில் புரியுமிடத்தில் மேலதிகாரிகளுடன் கருத்து மோதல்களும் ஏற்படலாம்.

மிதுனம்: உயர்ந்த எண்ணம் உயர்வுக்கு வழிகாட்டும் தெய்வத்தின் உதவியும் தாராளமாக உண்டு.

கடகம்:- உழைப்பின் ஊதியம் மந்தமாகவே இருக்கும் விடயங்களிலும் சோர்வு நிலை தென்படும்.

சிங்கம்:- இலாபகரமான விடயங்கள் அனைத்தும் இன்று மந்தமாகவே இருக்கும். அதிக முதலீடு செய்வதை தவிர்த்துக் கொள்ளவும்.

கன்னி:- சிறு விடயம் கூட இன்று சிரமமாக தோன்றும் உடல் நிலையிலும் சோர்வு தென்படும் அமைதியே நன்று

துலாம்:- ஆத்திரப்படுவதால் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும் உடல் நிலையிலும் முன்னேற்றமுண்டு.

விருச்சிகம்:- வியாபாரிகளுக்கு சிறப்பான நாளாகும் புதிய தொழிலுக்கான முயற்சிகை கூடும். புதிய நண்பர் ஒருவரைச்சந்திக்க நேரும்.

தனுசு:- தொழில்துறையில் சோர்வு தென்படும். எதிர்பார்த்த வரவில் தடையேற்படும். சகோதரவழியாலும் சஞ்சலமுண்டு.

மகரம்:- வாகனச் சொந்தக்காரர்களுக்கு வரவில் மந்த நிலை தென்படும். பாதையிலும் பழுதுண்டு, போக்குவரத்தில் கவனம் வேண்டும்.

கும்பம்;- நெருங்கிய உறவினர் ஒருவரின் வருகைக்கு இடமுண்டு. நீண்ட நாட்கடன் இன்று நிவர்த்தியாகும்.

மீனம்:- மறைமுக தாக்குதலுக்கும் இடம் உண்டு. பிரயாணமொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## பிரிட்டன்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பங்கள் தொடர்ந்து தனியான முறையில் கவனிக்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தூதராலயத்துக்கு காலை 7 30 அல்லது 6-45 மணிக்கு முன்வரவேண்டிய அவசியம் இல்லை. பகல்8 மணிக்கு 'கியூ' வரிசையில் அவர்கள் நிற்கும் பட்சத்தில் அவர்கள் அனுமதிக்கப்படுவர். 'கியூ' வரிசையில் எந்த இடத்தில் அவர்கள் நிற்கிருர்கள் என்பது கருத்தில் கொள்ளப்பட மாட்டாது போயா தினங்களிலும் பொது விடுமுறைத் தினங்களிலும் தூதராலயம் அலுவல்களுக்குத் திறக்கப்படமாட்டாது. புதன் கிழமைகளில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா இந்த ஏற்பாடுகள் விசாவுக்கு விண்ணப்பிப்பதில் இதுவரை இருந்து வந்த இடர்பாடுகளை நீக்குமென தூதராலயம் நம்புகிறது.

## வெள்ளிச்சிந்தனை

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

பூசனை என்பது திருவுருவத்தைக் கிரியா பூர்வமாக, அதாவது அபிடேகம், சாத்துப்படி, அர்ச்சனை, தீபாராதனை முதலியவற்றுல் உபசரித்தல், பூசையினுல் இறைவன் திருமேனியை உபசரித்தலால் ஒருவரின் உடம்பு விசேட தூய்மை அடைகிறது எனலாம்.

செபம் என்பது இறைவனின் நாமத்தை உரைத்தோ, நடுத்தரமாகவோ, மென்மையாகவோ அல்லது நாக்கு அடியோடு அசையா வண்ணமோ உருப்போடுதலாகும். பஜனையினுல் இறைவனைப் பாடவ, வாயார வழுத்தவே வாக்கு தூய்மையடைகிறது.

தியானம் என்பது குரங்கு போல எப்போதும் தாவித்திரியும் மனமானது ஒரு திருவுருவத்தை தனக்குப் பற்றுக்கோடாகப் பற்றுவதாகும். இறைவன் நேரிலே காட்சி கொடுத்து வடிவங்களைப் பற்றி புராணங்கள் ஆகமங்கள் வாயிலாக அறிந்து உருவாக்கப்பட்ட திருவுருவங்களை மனதில் நிறுத்தித்தியானிக்கவேண்டும். இதனுல் மனம் சுத்தியாகும்.

தெய்வங்கள் பலவென எண்ணி நாம் ஏமாறக்கூடாது. சிவபெருமான் அன்பர்க்கு அருள்புரியக்கொண்ட வடிவங்களே பலவாகஉள்ளன. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுக் கொண்டருளிய மூர்த்தங்கள் விநாயகக்கடவுள் சுப்பிரமணியக்கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரக்கடவுள் எனப் பல மூர்த்தங்களாக உள்ளன பல உருவில் விளங்கும் தெய்வங்களுக்குச் செய்யும் வணக்கம் அனைத்துமே சிவபெருமான்ஒருவரை குறித்தவணக்கமேயாம். அதனுல் நாம் வழிபடும் தெய்வங்கள் அனைத்தும் ஒன்றே; பெறும் பலனும் ஒன்றே.

பூசனை, செபம், தியானம் இவற்றிேைடு கூட்டுப்பிரார்த்தனை வேறுபட்டதல்ல. இதைதான் ஒளவையாரும் "ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்" என்று கூறிவைத்துள்ளார், இறைவன் திருநாமங்களைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே "எதை எதையோ பேசும், பாடும் இந்த நாவானது எம்பெருமானை புகழைப் பேசவோ, பாடவோ மறுக்குமேயானுல் மறுபிறப்பில்ஊமையாக, செவிடர்களாக, குருடர்களாகப் பிறக்கநேரிடும்" என ஒரு பெரியார் கூட்டுப் பிரார்த்தனை நேரங்களில் சொல்லுவார்.

சைவ சமயத்தவர்கள் என்றும் சைவர்கள் என்றும் நாம் சொல்லிப் பெருமைப்படுகின்ருேம், உண்மையில் நாம் சைவர்கள்தானு. ஆங்கிலத்தில் 'சீரோ' என்பார்கள். அர்த்தம் - பூச்சியம் 'ஒன்று' மில்லை, இப்படித்தான் கருதில் கொள்ளவேண்டிய காலம்; கிழமைகளில் ஏழுநாட்கள். வெள்ளிக்கிழமை ஒருநாளை இறைதொண்டிற்காக ஒதுக்குகின்ருேம் சைவ உணவு உட்கொள்ளும் நாளாகவும் வைத்துள்ளோம். இன்றைய காலகட்டத்தில் வெள்ளிக்கிழமையும் மச்சமாமிசம் உண்ணும் நாளாக மாறிக் கொண்டுபோவதை அறியாதார் இலர். புனிதமாக இருந்தாலன்ருே இறைவனின் திருநாமங்களைப் பாடித் துதிக்க மனம் இடம் கொடுக்கும். புலால் உண்டு. புண்பட்ட மனத்தினராய் புராணம் ஓதுவதால் ஏது பலன்? இடையருத அன்பினுல்தான் இறைவனை அடையமுடியும்.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டே யாம்" என்றும், "இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால் நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்" என்றும். "கடவுள் ஒருவரே நம்மோடு என்றும் தொடபுடையவராய். நமக்கு நம்மினும் இனியவராய் உள்ளார். அவருக்கே நாமெல்லாம் உடைமைப் பொருள்" என்றும் நல்லை நகர் தந்த நாவலர் பெருமான் சொன்னவற்றைச், சிந்தித்து தெய்வவழிபாடு கூட்டுப் பிரார்த்தனை என்பன மூலம் இறைபக்தியைப் பெருக்கி நாம் சிவநெறிச் சீலர்களாக ஆக வேண்டும்.

"திருநாமம் அஞ்செழுத்தும்
செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால்
பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில்
சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்
திட்டுண்ணுராகில்
அருநோய்கள் கெட வெண்
ணீறணியா ராகில்
அளியற்றுர் பிறந்தவர்
றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப்
பெயர்ந்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி
இறக்கின்ருரே".

— திருநாவுக்கரசர்

எஸ். ஐ. தனபாலசிங்கம்

## வடமராட்சி மறவாதவர்



வதிரியூர் மக்களால் அபிவிருத்தியின் தந்தை எனப்பாராட்டப்பட்ட மறைந்த டாக்டர் வே. ஆ. கோவிந்தசாமியின் புதல்வர் கோ. சபாநாதன் மறைந்து வருடம் ஒன்ருகிறது மக்கள் சேவையே மகேசன் சேவை எனத் தனது வாழ்க்கையை மக்களுக்காக அர்ப்பணித்து இலவச வைத்திய சேவைகள் ஆற்றி வந்த தனது தந்தையின் தொழிலையும் சேவையையும் தொடர்ந்து மக்களுக்காகச் செய்துவந்தவர் டாக்டர் சபாநாதன்.

டாக்டர் சபாநாதன் தன் தந்தையைப் போலச் சிறந்த ஒரு நகைச்சுவை நடிகர் சமயோசிதமாகப் பேச வல்லவர் ஏழைகளுக்கு இரங்கிஇன்முகம் காட்டி இலவச வைத்தியம் செய்தவர். வெள்ளை மனம் கொண்ட இவரின் சேவை வடமராட்சிப் பகுதியில் பிரபல்யமாகினது.

டாக்டர்சபாநாதன் நற்பண்புக்கும், சிநேக பான்மைக்கும் சமூகசேவைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கினுர். வடமராட்சி அவரை என்றும் மறவாது.

— வதிரியான்

## கௌரவிப்பு

(கொழும்புத்துறை)

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தின் புதிய மாடிக் கட்டிடத்தை இருமாத காலத்தில் பூர்த்திசெய்த கட்டிட ஒப்பந்தகாரர் திரு. ஏ தியாகராசாவிற்குப் பாடசாலை அபிவிருத்திச் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் திரு கே பேரம்பலம் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஏ. தங்கராசா, திரு. தியாகராசாவிற்குப் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார்.

## எம். ஜி. ஆர் ஜப்பானில் கப்பல் வாங்குவார்

(சென்னை)

தமிழ் நாடு பூம்புகார் கப்பல் கூட்டுத்தாபனம் 23 கோடி ரூபா செலவில் புதிய சரக்குக் கப்பல் ஒன்றை வாங்கவுள்ளது.

ஜப்பான் செல்லும் தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் அடுத்த மாதம் 1ம் திகதி இக்கப்பலை ஜப்பானின் நகரான ஒஸாக்காவில் முறைப்படி பெற்றுக் கொள்வார்.

இந்தக் கப்பல் தமிழ்நாட்டிலுள்ள அனல் மின்சார நிலையங்களுக்கு தேவையான நிலக்கரிகளை ஏற்றிச் செல்வதற்கு பயன்படுத்தப்படும்.

கப்பலை கொள்வனவு செய்வதன் மூலம் தமிழ் நாட்டுக்கு வருடம் 12 கோடி ரூபா லாபம் ஏற்படும்.

இன்னொரு கப்பலையும் வாங்குவதற்கு மத்திய அரசு தமிழ் நாட்டுக்கு அனுமதி அளித்துள்ளது.

இத்தகவலை தமிழ் நாடு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. முத்துசாமி சென்னையில் தெரிவித்தார்.

## வள்ளுவர் இல்லம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

"நாளைய சமுதாயத்தினைக் கட்டியெழுப்பி வழிநடத்த இருக்கும் இன்றைய இளைஞர்களின் வாழ்க்கை வரலாற்றில் பாடசாலை விளையாட்டு மைதானம் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. இங்கு போட்டிகளில் கலந்து பெறும் பயிற்சியும், அனுபவமும் உடற்றிண்மையும், மன ஆரோக்கியத்தை வளர்த்து எதிர்காலப் பொறுப்புக்களை ஏற்றுநடத்தப் பெருந்துணை புரிகின்றன" என்று காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டிகளுக்கு தலைமைவகித்து உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு. து. பாலசிங்கம் கூறினுர்.

இவ்விளையாட்டுப் போட்டிகள் இம்முறை மிக அடக்கமான முறையில் பாடசாலை மட்டத்தில் நிகழ்ந்தபோதிலும் பெருந்தொகையான பெற்ருேரும், பழைய மாணவரும் வந்திருந்தனர்.

வள்ளுவர் இல்லம் முதலாம் இடத்தையும், இளங்கோ இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

(வி)

## ஆசிரியர் இல்லை பாடசாலை மூடப்பட்டது

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறை கிழக்கில் உள்ள போக்கறுப்பு சி. சி. தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் எவரும் இல்லாததினுல் மூடப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக ஒரு ஆசிரியர் பாடசாலையாக இயங்கி வந்த அப்பாடசாலையில் தற்போது எந்தவொரு ஆசிரியரும் இல்லாமலே மூடப்பட்டுள்ளது இதனுல் அங்குகற்ற மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளதாகப் பெற்ருேர் கவலை தெரிவிக்கிருர்கள்

## பக்தர்களுக்கு சிறப்பானசேவை

(மாவிட்டபுரம்)

கீரிமலையில் இடம் பெற்ற ஆடிஅமாவாசை தீர்த்த உற்சவத்தின்போது கீரிமலை பிரஜைகள் குழுவும் அன்னையர் முன்னணியும் பக்தர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து சிறப்பான சேவைபுரிந்தனர்.

★ இன்று கன்னுதிட்டி அருள்மிகு
காளிகாதேவி 5 ம் திருவிழா

விழாக்காண வினைதீரும்

எந்நாளும் அன்னைபதம் தொழுவோர்கட்கே
இன்னல் போம் நோய்கள் போம்
சுகங்கள் சேரும்
எந்நாளும் கல்வியொடு செல்வம் சேரும்
எனறேதான் உலகனைத்தும் கூறிக்கொள்ளும்
கன்னுதிட்டிப் பதிக்குச்சென்றே அன்னை
காளியது விழாக்காண்போம் கவலைதீரும்
பொன்னுக வாழ்வுதனைப் பேணிக்கொள்வோம்
புவித்தலத்தே நிறைவன்றிக் குறைவ இல்லை.

ஜெயகிருஷ்ண ஜுவல்லர்ஸ்
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ இன்று கன்னுதிட்டி அருள்மிகு
காளிகாதேவி 5-ம் திருவிழா

ஆறுதல் அளிக்கும் தாய்!

அண்டியே அரற்றினோர்க்கு ஆறுதல்
அளிக்குந் தாயே
சண்டி நீ சண்டியர்க்குச் சங்காரியாகி நிற்பாய்
எண்டிசை எங்குஞ்சென்று அடியரின்
இன்னல் தீர்க்கும்
விண்டிடு கன்னுதிட்டி இலங்கிடும் காளித்தாயே!

வேண்டிய வேண்டியாங்கு ஈய்ந்திடும் வேணி வரணி
காண்டிடக் காட்சிநல்கும் கருணையே
அருளின் சோதி
தாண்டவர் தாயுமாகித் தனிமுலை ஊட்டி நின்ருய்
மாண்டகு கன்னுதிட்டி இலங்கிடும் காளித்தாயே!

கே. கே. இராசரத்தினம்
நகை மாளிகை,
277 (129), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை: 27ம்திகதி ஆலோசனைமாநாடு

(மாவிட்டபுரம்)

அடுத்த மாதம் ஆரம்பமாக விருக்கும் க.பொ.த. உயர்தர பரீட்சை சம்பந்தமான விசேட மாநாடு ஒன்று இம்மாதம் 27ம் திகதி யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

பரீட்சையை அமைதியான முறையில் நடாத்தவும், பரீட்சையில் நடைமுறைப்படுத்த வேண்டிய நடைமுறைகள் பற்றி விளக்கவுமே மேற்படி மாநாடு கல்விப்பகுதியால் நடாத்தப்படுகிறது.

பரீட்சை இணைப்பதிகாரிகள் பரீட்சை மேற்பார்வையாளர்கள் கலந்துகொள்ளும் இம்மாநாட்டில் கொழும்பிலிருந்து வரும் கல்விஇலாகா அதிகாரியும் கலந்துகொள்வார்.

இம்முறை பரீட்சை சுமுகமாக நடைபெறும் என கல்வி இலாகா நம்பிக்கை கொண்டுள்ளது.

# அநுராதபுரம் ஆசிரியர்கள் ஆலோசனைக் கூட்டம்

(கொழும்பு)

அண்மையில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் ஆசிரியர்களுக்கான சேவை முன் பயிற்சி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 3-ம் திகதி ஆரம்பிக்கப்படும்.

இதுவரை பயிற்சி வழங்கப்படாத ஆசிரியர்களுக்கே இந்தப் பயிற்சித்திட்டம் அளிக்கப்பட உள்ளது.

கடந்த ஏப்ரல் மாத விடுமுறையின்போது இவர்களில் ஒரு பகுதியினருக்கு பயிற்சி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கொலையுண்ட மாணவருக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்]

83 ஜூலை கலவரத்தின் போது மானிப்பாயில் இடம்பெற்ற பிரயாணிகள் பஸ் படுகொலைச் சம்பவத்தில் பலியான மாணவ இளைஞர்களின் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட நினைவுத் தூணுக்கு உறவினர்கள் உட்பட ஏராளமான பொதுமக்கள் சமயாசார முறைப்படி அஞ்சலி செலுத்தினர்.

சண்டிலிப்பாய் — கீரிமலை வீதியில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கண்மையில் இந்த நினைவுக்கல் இருக்கிறது.

சம்பவதினத்தன்று பஸ்ஸில் பிரயாணம் செய்த அப்பகுதி பாடசாலை மாணவர்கள் மாதகல் முகாமிலிருந்த இராணுவத்தினரால் பஸ்ஸுக்குள்ளிருந்து இறக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே. (மா)

## வவுனியாவில் வான், மினிபஸ் கடத்தல்

[வவுனியா]

வவுனியாவுக்கு கெப்பிற்றிப்பொலவிலிருந்து பொருட்கள் ஏற்றிவந்தவானும், மதவாச்சியிலிருந்து பிரயாணிகள் வந்த இரு மினி பஸ்களும் நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

பொருட்களையும், பிரயாணிகளையும் வாகனங்களிலிருந்து வெளியேற்றிய பின்னரே வாகனங்கள் கடத்தப்பட்டதாகவும் அதில் ஒன்று இடை நடுவில் விபத்துக்குள்ளாகவே அதைக் கைவிட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## இறைவனடி சேர்ந்தார்

[தொண்டமானாறு]

தொண்டமானாறு செல்வச்சந்தி ஆனந்தா ஆச்சிரம சுவாமியான முத்துக்குமாரு மயில்வாகனம் இறைவனடி எய்தியுள்ளார். இவர் 45வருடகாலமாக, இவ்ஆச்சிரமத்தை நல்லமுறையில் நிர்வகித்து, ஆத்மீகப் பணியாற்றினார். அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறும். [கெ]

## பஸ்ஸில் பொருட்கள் அபேஸ்!

[யாழ்ப்பாணம்]

பஸ்ஸில் பிரயாணம் செய்த தினசரிப் பத்திரிகை வியோகஸ்தர் ஒருவரின் விலையுயர்ந்த கைக்கடிகாரமும்' ரொக்கப்பணமும் கையாடப்பட்டுள்ளது.

சந்தர் மட்டத்தைச் சேர்ந்த ரி கருணாநிதி [26 வயது] என்பவரே மேற்படி பொருட்களைப் பறிகொடுத்தவராவார்,

கடந்த செவ்வாய் காலை கொடிகாமத்திலுள்ள பத்திரிகை விற்பனவு செய்யும் கடைக்குப் பத்திரிகைகளைக் கொடுத்துவிட்டு, காலை 8மணியளவில் 769 இலக்க இ போ ச. பஸ்ஸில் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்ததாகவும், தான் இருந்த இருக்கையில் ஓர் இளம்பெண்ணும் கூட இருந்ததாகவும் அவர் தெரிவிக்கிறார்.

சற்றுத் தூக்கத்தில் இருந்த இவர், சாவகச்சேரி பஸ்நிலையத்தில் விழித்துப் பார்த்தபோது தான் வைத்திருந்த 'டிஸ்கோ' பாக்கைக் காணாது பரிதவித்தார். அப்பொழுது அருகிலிருந்த இளம் பெண்ணையும் காணவில்லையாம்.

அவர் பறிகொடுத்த பாக்குள் 92 ரூபாவும், 500 ரூபா பெறுமதியான சீக்கோ கைக்காகாரமும் சைக்கிள் திறப்பும் இருந்ததாகத் தெரிவிக்கிறார்''. (மா)

# "கல்வியும் விளையாட்டும் இரு கண்கள் போன்றவை"

## கல்வி அதிகாரி பேச்சு

[யாழ்ப்பாணம்]

''வகுப்பறைக் கல்வியில் எவ்வளவு விவேகியாயிருப்பினும் ஒருவரை அக்கல்வி தனித்து பூரணத்துவமடையச் செய்யாது இதன்மூலம் திடமான உடலையும், வலுவான மனப்பாங்கையும் அவர் பெற முடியாது. கல்வியும், விளையாட்டும் ஒருதாய் பிள்ளைகள் போன்றவை'' என்று பிரதம கல்வி அதிகாரி திரு. ஆர் சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார் கல்லூரிஅதிபர்திரு பீ நாகரத்தினம் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது.

அவர் அங்கு மேலும் பேசுகையில்:-

ஒரு தாய் தமது இருபிள்ளைகளை எங்ஙனம் பாரபட்சமின்றி பராமரிப்பது போன்று மாணவர்களாகிய நீங்களும் கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் ஆர்வத்துடன் ஈடுபடவேண்டும் உள ஆரோக்கியத்தை வளர்ப்பது கல்வி, உடற் சுகத்தைக்காப்பது விளையாட்டு. எனவே இவை உங்களுக்கு இரு கண்கள் போன்றவை எனவே ஒவ்வொரு மாணவ, மாணவியும் கட்டாயமாக விளையாட்டுகளில் ஈடுபடல்வேண்டும்''

''மாணவ பராயமே கல்வி விளையாட்டுகளுக்கு மிக ஏற்ற பருவம். பாடசாலைகள் இவ்விரு துறையிலும் விருத்தியடைய வாய்ப்புக்களை அளிக்கின்றன. இவ்வாய்ப்புக்களை மாணவர்கள் நழுவவிடக்கூடாது.''

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மானிப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ச. தனஞ்சயன் தமதுரையில் கூறியதாவது:- மாணவ சமுதாயத்தில் பல மாற்றங்கள் தென்பட்டுள்ளன. கல்வியிலும் விளையாட்டிலும் மாணவர்களிடம் எம் எதிர்பார்ப்புகள் மிக உயர்ந்தவை. இவ் எதிர்பார்ப்புகள் நிறைவுபெற மாணவ சமுதாயம் விடா முயற்சியையும் ஊக்கத்தையும் உறுதுணையாகக் கொண்டு முன்னேறல் வேண்டும் என்றார்.

திரு. சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கினர். இளையதம்பி இல்லம் முதலிடத்தைப் பெற்றது. (வி)

## தேங்காய் உற்பத்தியாளர் பாதிப்பு

(நெடுந்தீவு]

நெடுந்தீவில் தேங்காயின் விலை ஐம்பது சதமாகவும், சில இடங்களில் நாற்பது சதமாகவும் விலைகுறைந்துள்ளது இதனால் தேங்காய் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இதேவேளையில் உள்ளூர் தேங்காய் எண்ணெய் ரூபா பத்திற்கும் விற்பனையாகின்றது.

## விசேட நிர்வாக அதிகாரி

(மாவிட்டபுரம்

வலி வடக்கு உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் விசேட நிர்வாக அதிகாரியாக திரு. ஜே. எஸ் அலெக்சாண்டர் நியமிக்கப்பட்டுள்ளார்

இவர் பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் பிரதம லிகிதராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## பாவனையாளர் சங்கம்

(மாவிட்டபுரம்)

பலாலியில் புதிய பாவனையாளர் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் தலைவராக ச. தனபாலசிங்கமும், உபதலைவராக ஒகஸ்டின் பீற்றரும், செயலாளர்களாக இ. சின்னையாவும், செ. சிவராசாவும், பொருளாளராக சி. சுப்பிரமணியமும் 9பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.


தமரோன் எல்.சி. 60

இப்பூச்சிநாசினி "பாயர்" ஸ்தாபனத்தாரின் ஒரு பிரத்தியேக தயாரிப்பு.

கொள்வனவு செய்வோர் தயவுசெய்து

"பாயர்" BAYER சின்னத்தை

முடியிலும் லேபல்களிலும் கவனமாக அவதானிக்கவும்

விலை: 100 மி. லீ. 33/-, 200 மி. லீ. 61/50, 450 மி. லீ. 125/-

BAYER ஹேகெம் லிமிட்டெட்

தயாரித்து விநியோகிப்போர்:

ஹேகெம் லிமிட்டெட்,
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.

உங்கள் விநியோகஸ்தர்கள்:

யூனியன் ஏஜென்சீஸ்,
50 A, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ்,
அந்தோனிப்பிள்ளை கட்டிடம்,
கிளிநொச்சி.

குளோப் ரேடர்ஸ்,
பசார் வீதி,
வவுனியா.

பாயர் இரசாயனம் இலங்கையின் பெருவிளைச்சலின் உறுதுணை.

கஜேன்
மினி சினிமா
(சத்திரம் சந்தி அருகாமை)
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
5 OFFENS
WAR FILM
நாட்டின் விடுதலைக்காகப் போராடும் விடுதலை வீரர்களின் உணர்ச்சிக் காவியம்

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி அருகாமை
தினசரி 10-30, 12-30, 2-30, 4-45, 7-00
I spit on your Grave
(நீ பிணமானாலும் நான் வந்து பழிவாங்குவேன்)
4 கயவர்களால் ஓர் இளம் பெண் கொடூரமான முறையில் ஒருவர் பின் ஒருவராக கற்பழித்து சித்திரவதை செய்கிறார்கள். அப்பெண் தன்னை கற்பழித்த அந்த நால்வரையும் பழிவாங்கும் திரைச்சித்திரம். காணத் தவறாதீர்கள். சந்தர்ப்பம் மீண்டும் கிடையாது.
(இது கண்டிப்பாக வயது வந்தவர்கள் மட்டும்)

வெலிங்டன்
10-30, 2-15, 4-30, 6-45, 9-00.
Five Times All China Kung-Fu Champion
(1674-75-76-77-78-79)
Jet Lee in
Shaolin Temple
(Cinemascope—Color
(இதுவரை காணாத குங்பூ கராட்டி வீரசாகசங்கள் நிறைந்த சீன வீரர்களின் திகிலூட்டும்சம்பவங்களை நேரில் பார்ப்பதற்கு ஓர் சந்தர்ப்பம்)
கொழும்பு மாநகரில் 200 நாட்களுக்கு மேல் ஓடிய படம்.

லிடோ சினிமா
10-30, 2-15, 5-30
பாலு மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
சண்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம்) பூர்ணிமா, ஜெயராம், சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

ஸ்ரான்லி மினி
5'X5' திரையில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
Escort Girls
வயது வந்தவர்களுக்கு மட்டும்

குமரன்
மினி சினிமா
10-30, 12-30, 2-30, 4-30
Charles Bronson
Ten to Midnight
(Adults Only)

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவில் / வெலிங்டன் தியேட்டர் சந்திக்குமிடையில்)
10-30, 2-30, 4-30, 7-00 மணி
HELL CATS
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)


## கவிதாஞ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"போர்க்களத்தில் மரணமடைந்த புலிகளுக்கு நெஞ்சங்களிலெல்லாம் இன்று நினைவு நாள்" என்று இப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

## வவனியாவிலும்...

இதே நேரத்தில் நேற்றுமுன்தினமிரவு ஐந்து குண்டுகள் வெடித்தன. பாரிய சத்தம் கேட்டு மக்கள் கிலிகொண்டனர்

வவனியா - மன்னார் வீதியில் மன்னார் சந்தியிலுள்ள பெற்றோல் நிலையமொன்று மேற்படி குண்டுவெடிப்பினால் ஓரளவு சேதமடைந்தது.

## தனிநாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைக் கூட்டணியின் அரசியல் குழு ஆர்வங்காட்டுகின்றது.

தற்போதைய நிலைமையில் தனிநாட்டுக் கோரிக்கையை வலியுறுத்தவேண்டுமென்பதில் இக்குழுவின் ஒருசாரார் ஆர்வம் காட்டுவதாகவும், வேறொரு சாரார் நியாயமான அரசியல் தீர்வை ஏற்படுத்துவதென்பதில் அக்கறை கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையிலான இக்குழுக் கூட்டத்தில் த. வி. கூ. தலைவர் மு. சிவசிதம்பரம், ரி. சிவசிதம்பரம், வி. பொன்னம்பலம் உட்பட ஒன்பதுபேர் கொண்ட உறுப்பினர்கள் மேற்படி விடயத்தை ஆராய்ந்தனர். இவர்கள் தொடர்ந்தும் இதுபற்றி ஆராய்ந்து தீர்க்கமான முடிவொன்றுக்கு முயற்சித்துவருகிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.


மேபெயர் மினி
(கன்னாதிட்டி)
10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்.—லதா
நற் இன்று நாளை

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
KILL ALL KILL AGAIN
— Karatte Film —
முழுநீள கராட்டிச்சண்டைகள் நிறைந்த பரபரப்பும், விறுவிறுப்புமூட்டும் படம்
—இன்று மட்டும்—

தேவி மினி சினிமா
(வின்ஸர் அருகாமை)
10-30, 2-30, 6-30,
பிரேம் — அஞ்சலி
குரோதம்
(கலர்)
(புதிய வெளியீடு)

இன்று முதல்
ஹரன் மினி
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
DIE EROBERER
ஐந்து இளஞ்சிங்கங்களின் பயங்கர கராட்டிச் சண்டைகள் நிறைந்த படம்.

மொடேர்ண்
மினி சினிமா
5 X 5 திரையில்
தினசரி 4 காட்சிகள்
NEW YORK NIGHTS
(வயது வந்தவர்கள் மட்டும்)


## கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். புகையிரத நிலையத்திலுள்ள 'வேர்க்ஷொப்' பிலிருந்து சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான உருக்குத் தகடுகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத இரு நபர்கள் மேற்படி பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இரவு மெயில் ரெயிலும், காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டைக்குச் செல்லும் மெயில் ரெயிலும் நேற்று ரத்துச் செய்யப்பட்டிருந்தன.

இன்று கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் வரவிருக்கும் 'இன்ரசிற்றி' கடுகதி ரெயில் சேவையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு கோட்டைக்கு செல்லவிருக்கும் 'இன்ரசிற்றி' கடுகதி ரயில் சேவையும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் வடபகுதிக்கான ரயில் அனுராதபுரம் மட்டுமே சேவையிலீடுபடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

## யாழ்தேவி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிச்செல்லுமாறு கேட்டுக்கொண்டனர். இதனைத் தொடர்ந்து, பிரயாணிகள் அனைவரும் இறங்கிச்சென்றதாகக் கூறப்படுகிறது. வழியனுப்ப வந்திருந்தவர்களும் அவர்களுடன் சென்றனர்.

### விடுதலை

சுமார் இருமணி நேரத்தின் பின்னர் சாரதியும், கார்ட்டும் திரும்பவும் கொண்டுவந்து விடுவிக்கப்பட்டனர்.

சாரதியிடமிருந்து அவர்கள் சாவியைப் பெற்றுக்கொண்டதாகவும், சனிக்கிழமை காலையில் சாவியைக் கொண்டுவந்து தருவதாகவும் இளைஞர்கள் தெரிவித்ததாக சாரதி செல்வரத்தினம் கூறினார்.

கார் ஒன்றில் தங்கள் இருவரையும் பல வீதிகள் வழியாகக் கொண்டுசென்றதாகவும், எந்தப் பக்கம் என்று தனக்குத் தெரியவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்: கார்ட்ஸுகலும் அதனையே தெரிவித்தார். [க]

## தமிழ்ப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் நீதிமன்றத்தில் நிகழ்த்திய உரையின் சுருக்கம் எழுதப்பட்டுள்ளது: சந்திகள் தோறும் பக்திப்பாடல்களும், தமிழ் தேசிய விடுதலைக் கீதங்களும் ஒலிபரப்பப்பட்டன.

பிரதான வீதிகளின் இருமருங்கிலுமுள்ள மின்சார-தந்திக்கம்பங்களில் வாழைகள் கட்டப்பட்டும், தோரணங்கள் தொங்கவிடப்பட்டுமிருந்தன.

தமிழ் தீவிரவாத இயக்கங்கள் விடுத்துள்ள வேண்டுகோளுக்கமைய நேற்று முன்தினம் நண்பகல் தொடக்கமே யாழ். நகரில் ஹர்த்தால் அனுஷ்டிப்பு ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்புப் பகுதியில் நேற்று சேவையிலீடுபட்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்றுக்குத் தீ வைக்கப்பட்டதால் சேதமேற்பட்டுள்ளது. இப்பகுதியில் வேறு அசம்பாவித சம்பவங்கள் எதுவும் இடம் பெறவில்லை. பல பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கமும் பார்க்க)

## சமாதான நீதவான் வேண்டும்

(பண்டத்தரிப்பு)

மாதகல் கிராமத்திற்கு சமாதானநீதவான் ஒருவரும் தற்போது இல்லையென்றும், இதனால் இப்பகுதி பொதுமக்கள் கடவுச்சீட்டு விண்ணப்பம் உறுதிப்படுத்தல் போன்ற தேவைகளுக்கு பிற கிராமங்களிலுள்ள சமாதானநீதவான்களை தேடிச்செல்லும் அவலநிலை ஏற்பட்டுள்ளதென்றும் ஆகவே இக் கிராமத்திற்கென சமாதானநீதவான் ஒருவரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் மாதகல் கடற்றொழில் விரிவாக்கசேவைச்சங்கம் நீதி அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத் தலைவர் திரு. எஸ். சூசைப்பிள்ளை, செயலாளர் திரு. வி. அருந்தவம் ஆகியோரினால் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் இம் மகஜரின் பிரதி யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## சபையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரச தரப்பினரிடம் கேள்வி எழுப்பினர்.

கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம பேசியதாவது: "பூட்டான் பேச்சுக்களில் யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? சிங்களவரையா, தமிழரையா, இந்தியாவையா?

இனப்பிரச்னை குறித்த பிரச்னைக்கு அரசியல் தீர்வே தேவைப்படுகிறது. ஆனால் பூட்டான் பேச்சுக்களுக்குச் சட்டத்தரணிகள் குழு அனுப்பப்பட்டுள்ளது.

அரசியல் பிரச்னையாகவுள்ள அவ்விவகாரத்தைத் தீர்ப்பதற்கு அரசியல்வாதி ஒருவராவது பூட்டான் பேச்சில்கலந்து கொள்ளவில்லை.

பூட்டானிலிருந்து கொண்டு கொழும்புடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆலோசனை பெறும் குழு அனுப்பிவைக்கப்பட்டிருக்கத் தேவையில்லை. சுயமாகத்தீர்க்கமான முடிவு எடுக்கும் ஒரு அரசியல் குழுவே அங்கு சென்றிருக்கவேண்டும்.

பூட்டான் பேச்சுக் குறித்து எதையும் ஒழித்து மறைக்க வேண்டாம். உலகத்தினதும், சிங்களவரினதும், தமிழரினதும் கௌரவத்தினை இப்பேச்சுக்கள் மூலம் பெற முயலவேண்டும்" என்றார்.

### தினேஷ் பேச்சு

மஹரகம எம். பி. தினேஷ் குணவர்த்தன பேசியதாவது:-

"திம்பு பேச்சுக்களை எதிர்க்கட்சிகள் குழப்ப முனைவதாக அரசு குற்றஞ் சாட்டுகிறது. ஆனால் மக்களிடம் தீர்வொன்றைத் திணிக்கவே அரசு முனைகிறது. இதற்காகவே எம்மீது குற்றஞ் சாட்டப்படுகிறது.

### ஜனாதிபதி பேட்டி

பொதுத்தேர்தலோ அல்லது சர்வஜன வாக்கெடுப்போ தேவையில்லை என்று ஜனாதிபதி சஞ்சிகை ஒன்றுக்குப் பேட்டியளித்துள்ளார்

த. வி. கூ. இந்தியா அல்லது தமிழ்த் தீவிரவாதிகள் இவற்றில் அக்கறை காட்டவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளா

ஆனால் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி எந்த ஒரு முடிவும் மக்கள் முன் வைக்கப்படும் என்று கூறியுள்ளார் எதையும்ஒளிக்கவேண்டிய அவசியமில்லை. பேச்சுவார்த்தை விபரங்களை இரகசியமாக வைக்க வேண்[illegible]ம், இதனால் நிலைமை மே சமாகும்."

### ஆயுதக்குவிப்பு

ஈழம் பிரி[illegible] திகள் ஆயுதங்களைக் [illegible] ருகிறார்கள். அரசு என[illegible] செய்கிறது. வவனி[illegible]த்தும், வாரிக்குட்டியூரில் இருந்தும் சிங்களவர்க[illegible]க்கப்பட்டுள்ளனர்" என்று

## பஸ் சேவை நிறுத்தம்

(நெடுந்தீவு)

கடந்த பல மாதங்களாக நெடுந்தீவு குருக்கள்மடம்-துறைமுக பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் டீசல் தட்டுப்பாடு என்று சொல்லப்பட்டு வந்தபோதிலும் இப்பொழுது பற்றறிகள் திருட்டுப்போய் விட்டதாகக் கூறப்படுகின்றது.

## இறந்தவர் குடும்பத்துக்கு நிதியுதவி

(புலோலி)

வல்வெட்டித்துறை மக்கள் வங்கியில் கடமையாற்றித் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமான அமரர் சோ. ஜெயச்சந்திரனின் குடும்பத்திற்கு வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச் சங்கம் மேலும் சுமார் 8,000 ரூபாவை விசேட உதவி நிதியாக வழங்கவுள்ளது.

இவ்வுதவுநிதி வழங்கும் வைபவம் இம்மாதம் 27ம் திகதி பருத்தித்துறை வியாபாரிமூலையிலுள்ள அமரர் ஜெயச்சந்திரனின் இல்லத்தில் வைத்து திருமதி ஜெயச்சந்திரனிடம் இப்பணம் காசோலையாகக் கையளிக்கப்படுமெனவல்வெட்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச்சங்கத் திட்ட அமைப்பாளர் திரு. வி. சிவசிரதேவன் அறிவித்துள்ளார்.

## வடக்கு, கிழக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

எவரும் எதையும் இழந்தது என்று கருதமுடியாத வகையில் இனப்பிரச்னைக்கு மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காணப்படவேண்டும்.

வட பகுதியில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் இடம் பெறுவதினால் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவேண்டியுள்ளது. சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றபோதிலும் வன்முறைகள் தொடர்கின்றன. எனினும் அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவிருக்கிறதென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து)

## இந்தியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாட்டுத்துறை அமைச்சர் வின்சென்ட் பெரேரா தெரிவித்தார்.

அவசர காலச்சட்டத்தை மேலும் ஒருமாதத்திற்கு நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திரு பெரேரா தொடர்ந்து கூறியதாவது:- இனப்பிரச்னை தொடர்பாக தமிழ்த் தீவிரவாதக் குழுவிற்கும், அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற முதல்சுற்றுபேச்சுக்களையடுத்து இரண்டாவது கட்டப் பேச்சுக்கள் வெகுவிரைவில் நடைபெறும் இப்பேச்சுவார்த்தைகளிலும் தமிழ் தீவிரவாதக் குழுக்கள் கலந்து கொள்ளும். இப்பிரச்னைக்க[illegible]ன தீர்வுகள் இலங்கையின ஒற்றையாட்சி அமைப்பிற்கு உட்பட்டதாகவே அமையும்.

இம்மாதம் 17ம் திகதிக்குள் யாழ்ப்பாணத்தில் 36 சம்பவங்களும், வவனியாவில் 45 சம்பவங்களும். மட்டக்களப்பில் 15 சம்பவங்களும், திருகோணமலையில் [illegible]0 [illegible]பவங்களும் தீவிரவாதிகளி[illegible] நடத்தப்பட்டுள்ளன [illegible]றும் திரு வின்சன்ட் பெரேர[illegible]தெரிவித்தார். (து)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAM... ..Y

# “இலங்கைத் தமிழர்கள் உரிமைகளை விட்டுக்கொடுத்து தீர்வு காணமுடியாது!”

(புதுடில்லி)

இலங்கையின் இனப் பிரச்னைக்குத் தீர்வு காணப்படும்போது தமிழர்களின் உரிமைகளை விட்டுக்கொடுத்துத் தீர்வு காணமுடியாது என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஐனுப்

## ராஜ்ய சபாவில் ஆலம்கான்

குர்ஷித் ஆலம் கான் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் ராஜ்சபாவில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் திம்புவில் இடம்பெற்ற இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக மகாநாடு குறித்து பல உறுப்பினர்கள் கேட்டகேள்விகளுக்குப்பதிலளிக்கையில்அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்னை தீர்வு காணும் விடயத்தில் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை விட்டுக்கொடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் அவர் உறுதியாகத் தெரிவித்தார்.

# ஆயர் இல்ல வாகன கடத்தலுக்கு கண்டனம்!

[யாழ்ப்பாணம்]

யாழ். கத்தோலிக்க பீடத்துக்கு உரிமையான வாகனங்கள் கடத்திச்செல்லப்படுவதற்கு, கத்தோலிக்க மக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

'யாழ் ஆயர் இல்லத்தில் உரிமை கோரப்படாத வாகனக் கடத்தல்'. என்ற தலைப்பில் “புண்படுத்தப்பட்ட கத்தோலிக்க மக்கள்” கையொப்பமிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“யாழ். ஆயர் இல்லத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 4-30 மணியளவில் கடத்தப்பட்ட வாகனம், உரிமை கோரப்படாத ஆயுதம் தாங்கிய இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட யாழ். கத்தோலிக்கமத பீடத்திற்கு உரிமையான 5-வது வாகனமாகும்.

“ஆயுதம் தாங்கிய இந்நபர்களின் கடத்தல் முயற்சிக்கு யாழ். ஆயர் உட்பட பல கத்தோலிக்க மத துறவியர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து அந்த ஆயுதம் தாங்கிய நபர்களிடம் அவர்கள் எவ்வியக்கத்தைச் சார்ந்தவர்களென பலமுறை வற்புறுத்திக் கேட்டபோதும், அதைப் பொருட்படுத்தாது ஆயுதமுனையில் தம்மை இனங்காட்டாமலே மேற்படி நபர்கள் வாகனத்தைக் கடத்திச் சென்றுர்கள்”

“கடந்த 23-ம் திகதி ஈழநாடு இதழில் “பொதுமக்களைப் பாதிக்கும் அத்தியாவசிய சேவைகளைச் சீர்குலைக்க மாட்டோம்” என்ற தலைப்பின்கிழ் நான்கு இயக்கங்களின் கூட்டு முன்னணியான 'ஈழத் தேசிய விடுதலை முன்னணி' அத்தியாவசிய சேவைகளை சீர்குலைப்பது 'தற்கொலைக்கு ஒப்பானது' என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரத்தில் இது போன்ற வாகனக் கடத்தல்களைக் கண்டிப்பதுடன் இவ்வாறுன செயல்களில் ஈடுபடுவோரை இனம்காட்டுவதாகவும், நிவாரணத்திற்கான வற்புறுத்தலை மேற்கொள்வதாகவும் தெரிவித்திருப்பதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது; மேற்படி கடத்தலுக்கு பொறுப்பான இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய நபர்கள் தம்மை இனம்காட்டப்படுவார். நிவாரணத்திற்கான வற்புறுத்தல் மேற்கொள்ளப்படுமா? என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கார் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

நாச்சிமாரி கோவிலுக்கண்மையில் உள்ள வீடொன்றில் பழுதடைந்து நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்று இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த 19-ம் திகதி இரவு அவ்வீட்டுக்காரரான பொ. இராஜேந்திரம் என்பவரிடம், திரும்பவும் ஒப்படைப்பதாகக் கூறி அக்கார் கடத்தப்பட்டதாம்.

ஓடமுடியாத நிலையில் நண்பர் ஒருவர் அக்காரை அவ்வீட்டில் நிறுத்திவிட்டுச்சென்றதாகவும், காரைக் கடத்தியவர்கள் அங்கு வைத்தே திருத்தம் செய்தபின்னர் எடுத்துச் சென்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### பிரவுண் வீதியில்

யாழ். பிரவுண் வீதியிலும் ஒரு கார் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## ‘புளட்’ சுவரொட்டி

(யாழ்ப்பாணம்)

‘வெலிக்கடைத் தியாகிகளை நினைவு கூர்ந்திடுவோம் என்ற தலைப்பிலான பெரிய சுவரொட்டிகளை ‘தமிழ் ஈழமக்கள் விடுதலைக் கழகம் (புளட்) வெளியிட்டுள்ளது.’

“2-ம் ஆண்டு நினைவஞ்சலி ஜுலை 25, 27” என்றும் அச் சுவரொட்டியில் குறிப்பிடப் பட்டுள்ளது. [மா]

## விபத்தில் பலி!

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்ற இரு பிள்ளைகளின் தந்தை ஒருவர் விபத்தில் சிக்கி ஸ்தலத்திலேயே பலியானுர்.

சுன்னுகத்தைச் சேர்ந்த இறைச்சிக்கடை வியாபாரியான ஹாசிம் (30-வயது) என்பவரே மரணமானவராவார்.

நேற்றுமுன்தினம் மாலை மல்லாகம் நீதிமன்றத்துக்கண்மையில் இவ்விபத்து இடம்பெற்றது.

அஸ்பஸ்டஸ் சீட் ஏற்றிச் சென்ற லான்ட் மாஸ்டருடன் மோதுண்டதாலேயே இவ்விபத்து நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. (மா)

## திருமலையில் மற்றுமொரு மின்கம்பத்தண்டனை

[திருகோணமலை]

இளைஞர் ஒருவருக்கு நேற்று உப்புவெளியில் ‘மின் கம்பத் தண்டனை’ நிறைவேற்றப்பட்டிருந்தது.

மின் கம்பத்தில் கட்டப்பட்டிருந்த இறந்த இளைஞரின் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

மேற்படி இளைஞரின் பெயர் கனகசபாபதி மோகன்குமார் (22 வயது) என்றும், இவர் இயக்கத்தின் பேரில் நிதி வசூலித்தவரென்றும், சடலத்திற்கு அருகாமையில் காணப்பட்ட சுவரொட்டியில் தெரிவிக்கப் பட்டிருந்தது.

## செட்டிகுளத்தில் அபிவிருத்தித் திட்டவேலைகள்

(புசிலைப்பள்ளி)

செட்டிகுளத்தில் உலகவங்கியின் நிதிஉதவியுடன் பல்வேறு அபிவிருத்தித் திட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அபிவிருத்தித்திட்ட வேலைகளின் ஒரு பகுதியாக செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் அதிபர் இருப்பிடவிடுதி, பற்சிகிச்சை நிலையம் ஆகியனவும் செட்டிகுளத்தில் பொதுசன நூல்நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு வேண்டிய புத்தகங்களும் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

செட்டிகுளம் அரசினர் வைத்தியசாலையில் புதிய வார்ட்டுகளும் அமைக்கப்படுகின்றன. இவையாவும் ஒருங்கிணைந்தகிராமிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேறகொள்ளப் படுகின்றன.

## ஆயுதக்கோஷ்டியின் ஆக்கிரமிப்பில் வன்னிக் கிராமம்!

(கொழும்பு)

வன்னிப்பகுதியிலுள்ள கிராமம் ஒன்றை ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்று தனது கட்டுப்பாட்டின்கீழ் ஆக்கிரமித்து வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கிராமம் ஒரு சிங்களக் குடியிருப்பு எனவும், அங்குள்ளவர்களை வெளியேறச் செய்யும் விதத்திலேயே நேற்று முன்தினம் முதல் இந்த ஆக்கிரமிப்பு இடம்பெறுவதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் போது சில வன்முறைச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளது தெரியவந்துள்ளது. ஆயினும் அதன் விபரம் வெளியிடப்படவில்லை.

## இனப்பிரச்னை தீர்வு——— ராஜீவ், ஜே. ஆர். கூட்டில் தமிழகம் நம்பிக்கை

### தொண்டா தகவல்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனுவும் கூட்டாக இலங்கை இனப் பிரச்னையைத் தீர்த்துவைப்பார்கள் என்ற பொதுவான அபிப்பிராயம் தமிழ்நாட்டில் நிலவுவதாக கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் எட்டு நாட்கள் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு இலங்கை திரும்பிய தொண்டமான், தாம் இலங்கை இந்திய தமிழ்த் தலைவர்களைச் சந்தித்த பின்னர் இந்த அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வை சமாதான முறையில் ஏற்படுவதையே அவர்கள் விரும்புகிருர்கள் என்றும் திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

திரு. தொண்டமான் தமிழ் நாட்டில் தனியார் மருத்துவ மனையில் மருத்துவ பரிசோதனைக்காக தங்கியிருந்தபொழுது தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கமும், அவரது பாரியாரும் சந்தித்ததாகவும் அவர் தெரிவித்தார். (து)

## சீ-நோரில் 6-வது தடவையாக கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

குருநகர் சீ-நோர் தொழிற்சாலையிலிருந்து ஆறுவது தடவையாகவும் பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

லாண்ட்டோவர் ஜீப். உயிர் காப்பு உடை, மின் விசிறி, மோட்டார் சையிக்கிள் ஆகியனவே கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (மா)

## மரண அறிவித்தல்

### இளையதம்பி இராமலிங்கம்

முன்னைநாள் பூநகரி உடையார் அமரர் இளையதம்பியின் மகன் இராமலிங்கம் காலமானுர். இவர் மகேஸ்வரி அம்மாவின் அன்புக்கணவரும், தங்கரெட்னம், சண்முகலிங்கம், விசாகப்பெருமான் (இலங்கைவங்கி, ஹட்டன்), பேரின்பநாயகம், தெய்வமலர் (இராமகிருஷ்ண மிஷன், செங்கல்பட்டு), பாலா, இராமலிங்கம் (பிரான்ஸ்), பதமராணி, தெய்வேந்திரன் (U. K), மகேந்திரன் (U. K) ஆகியோரின் தந்தையும், திருநாவுக்கரசு, பேரானந்தம் சத்தியா, மரிச்சா (France) ஆகியோரின் மாமனுரும், சிவரெட்னத்தின் சகோதரரும், அமரர் ஞானேஸ்வரி அம்மா, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னுரது ஈமக்கிரியைகள் 28-07-85 ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணியளவில் 304, கலைவாணி வீதி, காங்கேசன்துறையிலுள்ள அன்னுரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கிரிமலை ஐயனுர்கோவிலடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேம். (4689)

## மரண அறிவித்தல்

### காசிநாதர் சிவசுப்பிரமணியம்

ஏழாலை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற காசிநாதர் சின்னம்மா தம்பதிகளின் மகனும் கோண்டாவில் இ. போ. ச. நடத்துநருமாகிய சிவசுப்பிரமணியம் அவர்கள் 25-07-85இல் அகாலமரணமடைந்துவிட்டார். இவர் சிவயோகத்தின் (நோனு) அன்புக் கணவரும், சிவாநந்தினி, மாலினி, சியாமளா, சிவகணேசன், பத்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேஸ்வரி, சிவனடி, சிவபாதம் ஆகியோரின் சகோதரரும், திரு/திருமதி எஸ். வீ. பொன்னையா தம்பதிகளின் மருமகனும், திருகோணமலை தபாலதிபர் சிவபாதசுந்தரம், காரைநகர் இ. போ. ச. நடத்துனர் சிவானந்தநாதன், டாக்டர் சிவஞானசுந்தரம் (ஞானு), சிவநாயகி, சிவமணி, சிவனேஸ்வரி, சிவஞானம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னுரின் இறுதிக்கிரியைகள் 26-07-85 வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்கு ஏழாலை மத்தியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். (4690)

இப்பத்திரிகை “ஈழநாடு” லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலவ்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜுலை மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81 Eelanadu P; Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24126;